திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 100 பகுதி : 03 மார்ச் 2006

## சிற்றினம் சேராது அரசு செய்க!

அருளும் அன்பும் நீக்கி, நீங்கா
நிரயம் கொள்பவரொடு ஒன்றாது, காவல்,
குழவி கொள்பவரின், ஓம்புமதி!
அளிதோ தானே ; அது பெறல் அருங்குரைத்தே!

புறம்-5 -நரிவெரூஉத்தலையார்

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. மா. சங்கரபாண்டியன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. டாக்டர் ந.சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S. (Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம்.நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி.வீரணன் | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| டாக்டர் திரு.ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச.பரங்குன்றம், பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி, பி.இ., | உறுப்பினர் |
| திரு. க.முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா.கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.மாரியப்ப முரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| டாக்டர் திரு. க சின்னப்பா பி.எச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர் திருமதி. வீ.காந்திமதி பி.எச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர் திருமதி. செ.தனலெட்சுமி பி.எச்.டி., இணைப்பேராசிரியை பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 100
பகுதி : 03
*மார்ச்* 2006

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2037




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 6 | ரூ. |


ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

# பொருளடக்கம்


தோழ்மனம் 464

வள்ளலாரின் மனிதநேயம் 466
*முனைவர். இரா. செல்வகணபதி*

சுப்பையாவின் சுவட்டில் நடந்த சுப்புரத்தினம் 478
*சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்*

சிந்தாமணி கூறும் அறம் 493
*தி.வே. கோபாலய்யர்*

# இதழ்மணம்

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் இயற்றிய திருவருட்பா சொற்பொழிவு ஆண்டுதோறும் நடைபெறவேண்டும் என்னும் பெருவிருப்பத்தால் **மலேசியாக் கவிக்குயில் அறிஞர் கலியபெருமாள்** ஒரு அறக்கட்டளை நிறுவியுள்ளார்.

*தமிழ்நாட்டிலும் உலகெங்கிலும் சாதி, சமய, இன, மொழிப்* பிரிவினைகளை முன்வைத்து மக்களை வேற்றுமைப்படுத்தித் தங்கள் சாதிக்கும் மதத்துக்கும் இனத்துக்கும் மொழிக்கும் தீங்குநேர்ந்துவிட்டதாக இளைஞர் உள்ளத்தில் நச்சுவிதைகளைப் பயிரிட்டு வளர்த்து வேற்றுமை உணர்வையும் வெறிச்செயல்களையும் உலகெங்கும் பரப்பி அதன்மூலம் சுயலாபம் ஈட்டுகின்ற தாதாக்கள் தலைவர்களாகப் பெருகி இளைய தலைமுறையைச் சீரழித்து வருகின்ற இத்தருணத்தில் வள்ளலாரின் கருத்துக்கள் மகோன்னதமானவையாகும். மாணவர்களிடையே இத்தகைய அறக்கட்டளைச் சொற்பொழிவு இன்றியமையாத தேவையாகும். ***"வள்ளலாரின் மனிதநேய உணர்வு"*** உலகெங்கும் பரவும் வகையில் முயற்சி தேவை. அவ்வகையில் **முனைவர் இரா.செல்வகணபதி** அவர்கள் மாணவர்களிடையே ஆற்றொழுக்காக அரிய சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார் சொற்பொழிவோடு தம் பேச்சைக் கட்டுரை வடிவிலும் எழுதிச் செந்தமிழ் இதழில் வெளியிட உதவியுள்ளார்கள் அச்சொற்பொழிவு இவ்விதழில் இடம்பெறுகிறது.

அடுத்துப் பேராசிரியர் ***சு.குழந்தைவேல், பன்னீர்செல்வம்*** ***"சுப்பையாவின் சுவட்டில் நடந்த சுப்புரத்தினம்"*** என்னும் கட்டுரை எழுதியுள்ளார்கள். பாரதியும், பாரதிதாசனும் இளமை தொடங்கி *இறுதிவரைக் கருத்துத் தெளிவுடன் உரனும் உறுதியும் உடையவர்களாகக்* கொள்கை வழிநின்று தேசியத்தையும் சீர்திருத்தத்தையும் உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்த நிகழ்வுகளை இளைய தலைமுறைக்கு எடுத்துக் காட்டியிருப்பது சிறப்பாகும். கட்டுரை காலத்தின் கண்ணாடியாகப் பாரதியும் பாரதிதாசனும் வாழ்ந்த நாட்களை நம் கண்முன் கொண்டுவந்துள்ளது. ஓவியம் வரைவதற்குக் கீற்றுக்கோடுகள் போல இருபெரும் கவிஞர்களின் இலக்கியத்தின் கீற்று வரை படத்தை அமைப்பியல் நோக்கில் சிந்தித்துள்ளார் ; படித்து இன்புறத்தக்கதாகும்.

*புறம் 5 : விளக்கம்*

எருமைகளைப் போன்ற கருங்கற் பாறைகளுக்கிடையே கிடைமாடுகளைப் போல யானைக் கூட்டம் மேய்கின்ற காடுகளையுடைய அரச பெரும! நீ அருளும் அன்பும் உடையவன். ஆகையால் ஒருவன் எனப் போற்றுதற்குரியவன். (ஒருவன் என்னும் ஒருவன் காண்க – திருவாசகம்). உனக்கு ஒன்று மொழிவேன். "பெரும! நீ கானக நாடனாதலால் செல்வக்குறைவில்லை, ஆதலால் நீ நிரயங்கொள்ளும் சிற்றினத்தைச் சேராது நாட்டினைக் குழவி வளர்ப்பாரைப் போலப் பாதுகாப்பாயாக" என அறிவுறுத்துகிறார்.

தோற்றமும் செல்வமும் சிற்றினச் சேர்க்கையாலும் மக்கள் பால் அளியின்மையாலும் குன்றுமாகையால் நரிவெரூஉத்தலையார் இவ்வாறு எடுத்தியம்புகிறார்.

*பாடல்*

*எருமையன்ன கருங்கல் இடைதோறு*
*ஆனின் பரக்கும் யானைய முன்பின்*
*கானக நாடனை! நீயோ, பெரும!*
*நீ ஓர் ஆகலின் நின்ஒன்று மொழிவல்*
*அருளும் அன்பும் நீக்கி நீங்கா*
*நிரயம் கொள்பவரோடு ஒன்றாது காவல்*
*குழவி கொள்பவரின் ஓம்புமதி*
*அளிதோ தானே அது பெறல் அருங்குரைத்தே*

புறநானூறு 5 நரிவெரூஉத்தலையார்

# வள்ளலாரின் மனிதநேயம்

முனைவர் இரா.செல்வகணபதி

## அறிவின் அடையாளம்

இந்தியத் தொல் சமயங்கள் பலவும் மனித நேயத்திற்குச் சிறப்பான இடம் தந்தே வளர்ந்தன. தமிழ் நாட்டில் அறநூல் பாடிய ஆசிரியர்கள் பலரும் மனித நேயத்தில் தலைநின்றனர். அறநூல் ஆசிரியர்களுக்கு நிகராகவும், சிறிது மேலாகவும் சமய நூல் ஆசிரியர்களும் மனித நேயத்திற்கு முதலிடம் தந்தனர். மனித நேயத்தின் உச்சியில் பழுத்து கனியாகச் சிற்றுயிர்களுக்கும் அன்பு செய்யும் உயிர் இரக்கம் தோற்றம் கொண்டு வளர்ந்தது.

*'அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின் நோய்*
*தன் நோய்போல் போற்றாக் கடை'*

என்று வள்ளுவரும் அறிவின் நிறைந்த பயன் உயிர் இரக்கமே என வற்புறுத்தினார். அறநெறி வாழ்வு வாழ்ந்த வள்ளலார் உயிர் இரக்கத்திற்கு முதன்மை தந்ததோடு, மனிதநேயம் குறித்து பல கருத்துக்களை முன்வைத்தார். அவரது மனித நேயப் பதிவுகளை தொகுத்து, இனம்பிரித்து, ஆய்வுக்கு உட்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு நடைபெறுகிறது.

## புகழ்ச்சி எதற்காக?

வறுமையுற்றவன் பிறர்பால் சென்று ஒரு பொருளை இரப்பது இழிவு என்று சொன்ன சங்க நூற்புலவன் மானம் விடுத்து இரப்பானுக்கு இல்லை என்பதை அதனினும் இழிவு என்றான். வறுமையுற்றவன் முகம்பார்த்து இந்தா இதனைப் பெற்றுக்கொள் என ஒன்றை வழங்குவதைப் புறநானூறு உயர்ச்சியாகப் போற்றுகிறது. கொடுப்போரைப் போற்றலும் கொடாரைப் பழித்தலும் குறித்து வரும் சங்கப் பனுவல்களில் கவிஞர்களின் மனித நேயம் இழையோடுகிறது. சங்கப் புறப்பாடல்களில் கொடை மிகுத்துப் பேசப்படுவதன் உள்நோக்கம், மன்னர்களைப் புகழ்தல் என்பது போல் தோன்றினும் அவர்களை வறுமையுற்றார்க்கு மேலும் மேலும் கொடுக்கத்தூண்டும் மனித நேயத்தின் பதிவுகளாகவே கொள்ள வேண்டியுள்ளது.

## *வள்ளுவத்தில் மனிதநேயம் :*

திருக்குறளை மிக உயர்ந்த முழுமையான ஒரு மனித நேயச் சிறப்புரைக்கும் முதல் நூல் என்று கூறுதல் பொருத்தமுடையதேயாகும். இல்லற நெறி நிற்பானுக்குப் புகழ் வரும் வாயில்கள் பல இருப்பினும் ஈதல் வழி வருவதையே வள்ளுவர் பெரிதும் சிறப்பிக்கிறார். இரத்தலை இழிவு என்று வள்ளுவர் கருதியபோதிலும் வேறு வழி இல்லாத நிலையில் இரத்தலை அவர் அனுமதிக்கிறார். வறுமையின் கொடுமை கூறும் நல்குரவில் ஏழ்மையின் கொடுமை உரைப்பதன் வாயிலாக மனித நேயத்தில் வள்ளுவர் தலைநிற்கிறார். ஒப்புரவு அறிதல் வள்ளுவத்தின் தனிநாகரீக மனித நேயப் பதிவாகவே அமைகிறது. வறுமை–படைப்போன் குற்றம் என்பாரை அவர் நகையாடுகிறார். அவ்வாறு அவன் படைத்திருந்தால் அவனும் பிச்சை எடுத்துத் திரியட்டும் எனச் சினந்துரைக்கிறார்.

*'ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல்*
*அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'*

என்றெல்லாம் மனித நேயம் உரைத்தவர், வறுமையாளர் நிலைக்கு தாம் இரங்கி,

*இன்றும் வருவது கொல்லோ நெருநலும்*
*கொன்றது போலும் நிரப்பு*

*நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்*
*யாதென்றும் கண்பா டரிது*

என்றும் உரைக்கிறார். வறுமையாளர் மேல் கொண்ட கழிவிரக்கத்தால், அண்ணார் மனம் நோகாது. மனிதநேயம் காத்து, மரபு மீறி முரண்பாடாக

*'இன்பம் ஒருவர்கு இரத்தல்'*
*'இரத்தலும் ஈதலே போலும்'*

என்ற தொடர்களைப் பதிவு செய்கிறார். அவரது அளவற்ற மனிதநேயம்,

*கரப்பவர்க்கு யாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்*
*சொல்லாடப் போகும் உயிர்.*

என்ற குறள் வழி வெளிப்படுகிறது. பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் பலவும் மனித நேயத்தில் தலைநின்றே பாடப்பெற்றமை அவற்றை ஊன்றிக் கற்பாருக்குப் புலப்படவே செய்யும்.

### *சமணமும், பௌத்தமும்*

தமிழ்நாட்டில் சமணம், மற்றும் பௌத்த சமயங்கள் பெற்ற வளர்ந்த பெருவளர்ச்சிக்கு அவற்றின் மனித நேயக் கோட்பாடுகளே காரணங்களாயின.

*பசித்தோர்க்குச் சோறு*
*நோயுற்றோருக்கு மருந்து*
*அறிவற்றோருக்கு கல்வி*
*திக்கற்றவர்களுக்கு ஆதரவு*

என்பனவற்றை அண்ணார் முன்னிறுத்தினர். கடவுளினும் மேலாக மனிதத்தை அன்னார் மையப்படுத்தினர். உயிர்க் கொலைக்கு எதிரான கருத்தை அவர்களே முரண்முதல் துணிந்து உரைத்தனர். கருணை அல்லது தயாவை மூல அறமாக அன்னார் போற்றினர். சிலம்பிலும் மணிமேகலையிலும் ஏராளமான மனிதநேயப் பதிவுகள் இடம் பெற்றன. இளங்கோவடிகளின் கவுந்தி சாத்தனாரின் மணிமேகலை முதலிய பாத்திரங்கள் மனித நேயத்தை வெளிப்படுத்துவனவாகவே அமைந்தன.

### *திருமூலரின் மனிதநேயம் :*

வைதீக சமயங்களின் வரலாற்றில், சைவநெறி சார்ந்து எழுந்த திருமந்திரத்தில் மனித நேயம் குறித்த பதிவுகள் பலவும் காணப்படுகின்றன.

*'ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னமின்*
*பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்'*

என வரும் தொடர்கள் கருதத்தக்கன. இன்னார் இனியர் என்று பாராது பசித்தோர்க்குச் சோறிட வற்புறுத்தும் அருள்நெஞ்சம் திருமூலருக்கு இருந்தமை புலனாகிறது.

*'யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி'*

என்ற தொடர் அளவற்ற மனித நேயத்தில் பிறந்துள்ளது. அன்பும், சிவமும் வேறல்ல என்ற பதிவில்

*'அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவது யாரும் அறிகிலார் '*

எனப்பேசி மனித நேயத்தின் ஆணிவேராகிய அன்பைச் சிவமாகவே போற்றத் துணிகிறார். பசிவயிற்றோடு அலைவாரை அவர் நடமாடும் கோயில் நம்பர் என் கிறார். அண்ணாருக்கு இடுவது சிவத்திற்கே இடுவது எனப் புதுநெறி படைக்கிறார்.

## *பெரியபுராணப் பதிவுகள் :*

தேவாரமூவர் வாழ்வு அன்பும், அருளும் கலந்த வாழ்வு திருவீழி மிழலையில் பஞ்ச காலத்தில் பசித்தோர்க்குச்

*'சொல்லால் சாற்றிச் சோறிட்டார்*
*துயரொடு வறுமை தொலைத்திட்டார் '*

எனச் சேதுக்கிழார் போற்றிச் செய்கிறார். காடு வளர்த்தாலும் குளம்தொகுத்தலும் மேவினர்க்கு விருந்தளிப்பதும் நாவரசரின் இளமைக் காலப் பழக்கம் என்கிறது பெரியபுராணம். சுந்தர மூர்த்தி சுவாமிகள் மனித நேயத்தில் தலைநின்ற அடியவர்களைப் பட்டியலிட்டு உரைத்தார். சேக்கிழார் அன்னார் அருள் வரலாறு பேசி மனித நேயக் கூறுகளை வேறு பிரித்து இனங்காட்டினார்.

*'ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
*செல்லும் வாயெல்லாம் செயல் '*

என்ற குறள்நெறி நாயன்மார் வாழ்வில் மனிதநேயக் கூறுகளில் நிழலாடின. அப்பூதி அடிகளும் இளையான்குடி மாறநாயனாரும் மனித நேயத்தில் தலை நின்றனர்.

## *வள்ளலாரின் வருகை :*

தொடக்க காலங்களில் இறைமை குறித்துப் பாடி வந்த வள்ளலார் பிற்காலத்தில் தன்னைச் சூழ வாழ்ந்திருந்த மனிதர்களை ஈடேற்றி

உய்விக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இறைமை நெறி பேசி, மக்களை அடுத்த உலக இன்பத்திற்கு ஆயத்தப் படுத்துவதற்கு மேலாக அவர்களுக்கு மறுமை இன்பத்தை இந்த உலகத்திலேயே வழங்கும் வாழ் உண்டா என்று ஆராயலானார். இறைவன் தன்னை இந்த உலகத்திற்கு உரிய நோக்கம் யாதாக இருக்கும் என்று சிந்திக்கலானார். இயல்பிலேயே தெய்வநாட்டமும், ஈரநெஞ்சமும் கொண்டிருந்த வள்ளலாருக்கு மனித ஈடேற்றம் குறித்த சிந்தனை மிகுந்தது. வள்ளலாரின் பிற்காலப்பகுதியில் அவர் எண்ணும் எழுத்து, செயல் யாவும் மனித நேயம் பற்றியதாகவே அமைந்தது. அவரது கவிதைகளிலும் உரைநடைகளிலும் அவர் கொண்டிருந்த மனித நேயம் குறித்த பல பதிவுகளைக் காணமுடிகிறது. அவற்றுள் சிலவற்றைத் தேடித் தொகுத்து வள்ளலாரின் மனித நேயத்தை ஆய்வுக்கு உட்படுத்தலாம்.

## *வள்ளலார் அவதார நோக்கம் :*

வள்ளலார் காலத்தில் அவரைச் சூழ்ந்து வாழ்ந்திருந்த சமூகம் வறுமையும், அறியாமையும் மிக்கதாய், மூடப்பழக்க வழக்கங்களில் தோய்ந்து கிடந்தது. இவர்களை முதலில் ஈடேற்ற வேண்டும் என்பதற்காகவே இறைவன் தம்மை இவ்வுலகுக்கு அனுப்பி வைத்தான் என அவர் திடமாக நம்பினார்.

*அகத்தே கறுத்துப் புறத்தே வெளுத்,*
*திருந்த உலகர் அனைவரையும்*
*சகத்தே திருத்திச் சன்மார்க்க*
*சங்கத்து அமைவித்திட அவரும்*
*இகத்தே பரத்தைப் பெற்று மகிழ்ந்*
*திடுதற்கு என்றே எனை இந்த*
*யுகத்தே இறைவன் வருவிக்க*
*உற்றேன் அருளைப் பெற்றேனே*

என அவர் பாடுகிறார். மனிதர்களில் பலர், உள்ளாரென்று வைத்துப் புறம் ஒன்று பேசுபவர்களாக உள்ளதை நினைத்த வள்ளலார் அன்னாரைச் சினந்து ஒதுக்காது, அன்னாரது இந்த நிலைமைக் காண மூல காரணத்தைத் தேர்ந்து கண்டு, அன்னாரையும் தூய நெஞ்சினராக மாற்றி வாழ்விக்கும் வழிமுறைகளை வள்ளலார் அராய்ந்தார்.

### *சமரச சுத்த சன்மார்க்கம் :*

சாதிவெறி கொண்டு அலையும் ஒரு கூட்டம் மதத்தின் பேரால் மனித குலத்தைப் பிரித்தாளும் வேறு ஒரு குழு சமயங்களின் பேரால் மேற்கொள்ளப்பட்ட, பிரித்தாளும் சூழ்ச்சி என்பனவெல்லாம்– சமகாலத்தில் வள்ளலாரைப் பெரிதும் பாதித்தன. வாழ வேண்டிய மனிதகுலம் சாதிக்க வேண்டிய மானுடம், அற்பக் காரணங்களுக்காகப் பிரிந்து நின்று போராடுதலை அவர் மனம் துயரத்துடனும், பரிவுடனும் கணித்துத் தீர்வு காண முயன்றது. அன்னாரைத் தூற்றுவதும், சாபமிடுவதும், புறக்கணித்து ஒதுங்குவதும் ஒரு மனித நேய மாண்புடையவராகிய வள்ளலாருக்குச் சரி என்று தோன்றவில்லை. அவர்களின் பேதங்கள் அகற்றி அவர்களை எல்லாம் ஒருவர்பால் ஒருவர் அன்பு பூண்டு, இணங்கி வாழ வழிகொண்டு காட்டும் மனிதநேயப் பொறுப்பை வள்ளலார் தன் தோள்மீது சுமந்தார்.

*ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா*
*அருட்பெருஞ் சோதி என் உளத்தே*
*நீதியுள் கலந்து நிறைந்தது நானும்*
*நித்தியன் ஆயினேன் உலகீர்*
*சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே*
*சத்திய சுத்தசன் மார்க்க*
*வீதியில் சமைத்தான் நிறுவுதல் உண்மை*
*விளம்பினேன் வம்மினோ விரைந்தே*

மனித குலத்தைக் கூவி அழைத்து, சமரச சுத்த சன்மார்க்க நெறிகாட்டி வாழ்வித்தார் வள்ளலார்.

### *மனிதநேயப் பதிவுகள் :*

மனிதகுல பேதங்கள் குறித்த பல அரிய பதிவுகளை வள்ளலாரின் கவிதைகளில் நீளக் காண முடிகிறது.

*'வாடல்செய் மனத்தால் கலங்கினேன்'*
*'ஐயகோ சிறிதும் இங்கு ஆற்றேன்'*

*'பித்தெலாம் உடைய உடையர்தம் கலகப்*
*பிதெற்றெலாம் என்று ஒழிந்திடுமோ?'*

*'ஒன்று எனக் காணும்உணர்ச்சி என்றுருமோ?'*
*..................உண்ணவும் வறியார்*
*உறுபசி உழந்து வெந்துயரால்*
*வள்ளலே நெஞ்சும் வருந்தவும் படுமோ?'*

*'மற்றிதை நினைத்திடும் தோறும்*
*எள்ளலேன் உண்மை எரிகின்றது உடம்பும்*
*எரிகின்றது என்செய்வேன்'*

*'பசியினால் பிணியினால் மெய்யுளம்*
*வெதும்பிய வெதும்பைப்*
*பார்த்த போதெல்லாம் பயந்து எனது*
*உள்ளம் பதைத்தது'*

*'இவ்வுலகில் பசிஎனில் எந்தாய் என்னுளம்*
*நடுங்குவது இயல்பே'*

*'இருநிலத்தில் பசித்தவருக்கு பசிநீக்க வல்லார்*
*இவர்பெரியர் இவர் சிறியர் என்னல் வழக்கலவே'*

எனப் பல்வேறு பகுதிகளில் வள்ளலார் பதிவு செய்துள்ள ஈரவரிகளில், அவர் கொண்டிருந்த மனித நேயம் இழையோடுவதைக் காணமுடிகிறது. உயிர் இரக்கமும் அதுபற்றி வந்த மனித நேயமும் வள்ளலாரை ஓர் பெரிய தலைவராக நம்முன் நிறுத்துகின்றன.

## *பிள்ளைப் பெருவிண்ணப்பம் :*

வள்ளலாரின் பிள்ளைப் பெருவிண்ணப்பம் மிகச் சிறந்த மனித நேயத் தடமாக விடுத்துள்ளது. கடை எழு வள்ளல்களில் ஒருவனாகிய பாரி, ஒரு முல்லைக் கொடியின் வாட்டம் நீங்கத் தன் பொன் தேரை வழங்கினான். சிபி என்பான் ஒரு புறாவின் உயிருக்காகத் தன் தசையை அறுத்துத் தராசில் வைத்தான். பேகன் மயில் குளிர் நீக்கப் போர்வை தந்தான். மனுவேந்தன் ஒரு பசுவின் துடிப்பில் தன் மகனையே தேர்க்காலில் இட்டுக் கொல்ல முனைந்தான். மேற்குறித்த மரபில் வந்த வள்ளலார் பாரி போல நின்று

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பாடுகிறார். இது ஓர் அளப்பரிய கருணை நிலை பயிர் வாட்டம் ஒரு மனிதருக்கு மனவாட்டத்தைத் தரும் என்றால் அங்கே, அவர் உள்ளதே எத்துணைப் பரிவு இருந்திருக்க வேண்டும். நீர் பெறாது பயிர் வாடும் வாட்டத்திற்காக ஒரு வாட்டம். இது விளைந்திலதேல் வைக்கோல் இன்றி உயிர் இனம் வாடுமே என்பது ஒரு வாட்டம். விளைவு இன்றேல் மனித குலம் வாடுமே என்பது ஒரு வாட்டம் என இதனை நீள நினைக்க முடிகிறது.

## *உளம் பதைத்தல் :*

பசித்தோருக்கெல்லாம் சோறிட்ட ஒரு மன்னனைப் பசிப்பிணி மருத்துவன் என்கிறது சங்க இலக்கியம். பாரதப் போரில் பேதம் பாராது இருபக்கத்துப் படை வீரர்களுக்கும் மனித நேயத்தோடு சோறிட்டான். பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் ; பொருளைச் சேமித்து வைக்கும் இடம் பசித்தோர் பசி நீக்குதலே என்றார் வள்ளுவர். பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்றது ஒரு பழமொழி. பசித்தவனுக்காக வருந்துவது உலக வழக்கு. வள்ளலார் ஒரு படி மேலே சொல்கிறார்.

*'பசியினால் இளைத்தே*
*வீடுதோறிரந்தும் பசியறாது அயர்ந்த*
*வெற்றிரைக் கண்டு உளம் பதைத்தேன்'*

பசித்திருக்கிறான் என்பதில் இரக்கம் மானம் விட்டு செல்வன் வீட்டுப் படி ஏறி இவன் இரக்கிறாரே என்பதில் ஒரு இரக்கம். அதற்கும் மேலாக செல்வன் இல்லை என்று சொல்ல நம்பிக்கை தளர்ந்து, வேறு செயல் அறியாது முகம் சாம்பிப்படி இறங்குகிறானே அவனைக் கண்டு இரக்கம் கடந்த ஒரு உளம் நடுக்கம் பதைப்பாக வள்ளலார் உள்ளத்தில் எழுகிறது. கடவுளை உருகி உருகிப்பாடிய அவர் கவிதை மனம், கடவுளைப் பின்னுக்குத் தள்ளுகிறது. மனிதனை முன் கொணர்கிறது. முதலில் பசிதீர்க்க வழி காண்போம் என்று வள்ளலாரின் கருணை நெஞ்சம் அணையாத அடுப்பேற்றி, வடலூரில் சத்திய தருமச் சாலை காண்கிறது. சன்மார்க்க நெறியாளர்கள் வள்ளலார் திருவுளக் குறிப்பறிந்தே இன்றும் அன்னம் பாலித்தலைத் தலையாய அறமாகக் கொண்டு போற்றி வருகின்றனர்.

## நெஞ்சம் துடித்தல் :

பஞ்சமும் நோயும் நின் சீர் அடியார்க்கோ என்று பாரத தேவியை நோக்கி வினா எழுப்பினார் அமரகவி பாரதி. மனித நேயத்தின் அடுத்த பகுதி நோய் தீர்த்தல் நோய் இருவகை. ஒன்று உடல் பற்றியது. மற்றது உளம் பற்றியது. வள்ளலாரின் மனித நேயத்தில் பிள்ளைப் பெரு விண்ணப்பம் தொடர்கிறது.

*'நீடிய பிணியால் வருந்துகின்றோர் என்*
*நேர்உறக் கண்டுளம் துடித்தேன்'*

சிவனை வைத்திய நாதன் என்றும், வைத்தீஸ்வரன் என்றும், மருந்தீசன் என்றும் சைவ அருளாளர் குறித்தனர். ஒரு பெண்ணுக்குற்ற முயலகன் நோய் தீர்த்தார் ஞானசம்பந்தர். மக்கள் உற்ற சுர நோயை அவரே பதிகம் பாடிச் சிவனருளில் நீக்கியருளினார். வள்ளலார் திருநெஞ்சம் பிறர் நோய்கண்டு வாடி வருந்துவதைப் பாடல் வரி எடுத்துக் காட்டுகின்றது. வாடினேன் பதைத்தேன் துடித்தேன் என அடுத்தடுத்து வரும் சொல்லாட்டுகளில் அவர் உள்ளத்தின் துடிப்பை நம்மால் அறிய முடிகிறது. அது நீக்க அவரே பல மருந்துகளையும் மருத்துவ முறைகளையும் கண்டு தெளிந்தார். மன நோய்க்கு அவர் கவிதைகளில் ஏராளமான மருந்துகள் உள்ளன.

## உடல்மெலிதல் :

நிறைப்பகுதி அற்புதமானது. மனிதரில் புலர் மானம் போற்றி வாழ்பவர். அன்னார் இல்லாமை சொல்லவும் கூசுவர். ஏழைகளாய் இருப்பதிலும் கொடுமை அன்னார் மானிகளாக வாழ்வது ; அன்னார்க்கு இன்னது தேவை என்பதையும் அன்னார் குறிப்பின்வழி உதவும் நெஞ்சுடையாரும் அறிய முடிவதில்லை. இல்லாமை சொல்லி இழிவு பட்டு ஒருவர்பால் செல்லாத அத்தகையோருக்காக வள்ளலார் உள்ளம் அறிந்து ஊருகுகிறார்.

*'ஈடின் மானிகளாய் ஏழைகளாய் நெஞ்சு*
*இளைத்தவர் தமைக்கண்டே இளைத்தேன்'*

பிறர் துயரையும் தம் துயர்போல் எண்ணிமாழ்கும் வள்ளலார்

திருவுள்ளம் தாமும் இளைத்ததாகக் கருதி நைகிறது. வள்ளலாரின் மாபெரும் மனித நேயத்திற்கு இக்கவிதை ஓர் அரிய சான்றாக நிற்கிறது.

### *இறைவனிடம் விண்ணப்பம் :*

தனித்திரு அலங்கல் என்ற பகுதியில் இடம் பெற்றுள்ள பாடல் ஒன்றிலும் வள்ளலாரின் மனித நேயம் நிழலாடுகிறது.

*உள்ளலேன் உடையர் உண்ணவும் வறியார்*
*உறுபசி உழந்த வெம் துயரால்*
*வள்ளலே நெஞ்சம் வருந்தவும் படுமோ*
*மற்றிதை நினைத்திடும் தோறும்*
*எள்ளலேன் உள்ளம் எரிகின்றது உடம்பு*
*எரிகின்றது என்செய்வேன் அந்தோ*
*கொள்ளலேன் உணவும் தரிக்கிலேன் இந்தக்*
*குறையெலாம் தவிர்த்தருள் எந்தாய்*

பசித்திருப்பாரைப் பார்த்து, உள்ளம் நைய அன்னாரை எள்ளி நகையாடுவோர் மத்தியில் அன்னாருக்காக இரங்குவேனே அன்றி அவரை இகழ்ந்துரையேன் என்பார் எள்ளலேன் என்கிறார். அவர் துயர் வள்ளலாருக்கு உடலையும் உள்ளத்தையும் சுட்டெரிக்கிறது. மாற்றுவழி காணமாட்டாத அருள்நெஞ்சம் என் செய்வேன் என்று கையாறு கொள்கிறது. இறைவனிடம் விண்ணப்பம் இவற்றைத் தவிர வேறு காணாது மாழ்குகிறார்.

### *செல்வர்களைச் சினத்தல் :*

வள்ளலார் கோபம் செல்வர்கள் மேல் தடம்மாறுகிறது. ஏதுமற்ற என் உள்ளம் பிறர் ஏழ்மை கண்டு துடிக்கும்போது, அன்னார் துயர் நீக்கவல்ல செல்வச் செழிப்பினர் உள்ளங்கள் ஏன் கவலை உறுவதில்லை என்று வினவுகிறார்.

*கட்டோடே கனத்தோடே வாழ்கின்றோம் என்பீர்*
*கண்ணோடே கருத்தோடே கருத்ததனைக் கருதீர்*
*பட்டோடே பணியோடே திரிகின்றீர் தெருவில்*
*பசியோடே வந்தோரைப் பார்க்கவும் நேரீர்*

*கொட்டோடே முழக்கோடே கோலம்காண் கின்றீர்*
*குணத்தோடே குறிப்போடே குறிப்பதனைக் குறியீர்*
*எட்டோடே இரண்டும் சேர்த்தெண்ணவும் அறியீர்*
*எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே*

பகட்டோடு தெருவில் திரிகிறபோது செல்வர்களே பசித்தாரையும் நீங்கள் பார்க்கிறீர்கள் கொட்டோடும் முழக்கோடும் செல்லும் சாலை வளர்ங்களையும் காணுகின்றீர். என்ன கொண்டு போகப்போகிறீர். நமக்கும் சாவு வரும் என்ற அச்சத்திலாவது, வாழும் காலத்தில் வழங்க வேண்டும் என்ற உள்ளம் ஏன் உங்களுக்கு வரவில்லை? பகட்டோடு அன்னார் தெருவில் சுழல்வதைத் திரிதல் என்ற சொல்லில் குறித்துத் தன் சினத்தை வள்ளலார் வெளிப்படுத்துகின்றார்.

*பட்டினி கிடப்பாரைப் பார்க்கவும் நேரீர்*
*பழங்கஞ்சி ஆயினும் வழங்கவும் நினையீர்*
*எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோல் இளைத்தீர்*
*எத்துணை கொள்கின்றீர் பித்துல கீரே*

ஏழைகள் மேல் கொண்ட பரிவில் வள்ளலார் உண்மை செல்வர்களைச் சாடவும் துணிகிறது. யாருக்கும் பயன்படாது கிடக்கின்ற பழங்கஞ்சியை பிறர்க்கு வழங்குவதற்குக் கூட உள்ளமில்லா வன்னெஞ்சரை அவர் பித்துலகிர் என்று பரிசிக்கவும் செய்கிறார்.

### *அப்பா நான் வேண்டுகிறேன் :*

எளியாரை வலியார் அடித்தல் கண்டு வள்ளலார் உளம் நடுங்குகின்றார். அறிவுக் குறைபாட்டால் மயக்கும் மதுஉண்டு களிப்பாரைக் கண்டு அச்சம் கொள்கிறார்.

*'அளியர்பால் கொடியர் செய்த வெங்கொடுமை*
*அறிந்த என் நடுக்கம் ஆர் அறிவார்.'*

என்னும் பதிவில் வள்ளலாரின் மனித குல நேயம் துளும்பக்காணலாம். நிறைவாக அவர் கனிந்த நெஞ்சம் அருட்பெருஞ்சோதி ஆண்டவரிடம் ஒரு விண்ணப்பம் வைக்கிறது.

*எல்வுயிர்த் திரளும் என் உயிர் எனவே*
*எண்ணிநல் இன்புறச் செய்யவும்*
*அவ்வுயிர்களுக்கு வரும் இடை யூற்றை*
*அகற்றியே அச்சம் நீக்கிடவும்*
*செவ்வையுற்று உனது திருப்பாதம் பாடிச்*
*சிவசிவ என்று கூத்தாடி*
*ஒவ்வுறு களிப்பால் அழிவுறா திங்கே*
*ஓங்கவும் இச்சை காண் எந்தாய்*

மானுடத் துயர்தீர்க்கச் சகமானுடர் முன் வராதபோது, அன்பு கொண்ட ஏழைமை நெஞ்சம் வேறு வழி காணாது இறைவனையே தஞ்சம் அடைகிறது. வள்ளலாரின் முடிந்த பெரு விருப்பத்தைப் பதிவு செய்து இப்பாடலை நிறைவு செய்யலாம்.

*அப்பாநான் வேண்டுதல் கேட்டு*
*அருள் புரிதல் வேண்டும்*
*ஆருயிர்கட் கெல்லாம் நான்*
*அன்பு செயல் வேண்டும்*

எச்சார்பும் ஆகி உயிர்க்கு இதம் புரிதல் வேண்டும் எனை *அடுத்தார் தமக்கெல்லாம் இன்பு தரல் வேண்டும்*

**மலேசியாக் கவிக்குயில்**

கலிய பெருமாள் அறக்கட்டளைச் சொற்பொழிவு

16.03.06 வியாழன்

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

சொற்பொழிவாளர் முனைவர். **இரா.செல்வகணபதி**

# சுப்பையாவின் சுவட்டில் நடந்த சுப்புரத்தினம்

ச.குழந்தைவேல் பன்னீர்செல்வம்

*முன்னுரை*

கவிஞன் அல்லது எழுத்தாளன் என்பவன் சமுதாயத்தின் ஒரு அங்கம் அச்சமுதாயத்தின் நிறைகுறைகளுக்கு அவன் அப்பாற்பட்டவன் அல்ல. தான் வாழும் சமுதாயத்தின் அநீதிகளைக் கண்டு ஆர்ப்பரிக்கும் அவன்மீது ஏற்படப்போகும் எதிர்ப்பையும் வெறுப்பையும் நினைத்து அஞ்சி, தனது கருத்து வெளியீட்டு சுதந்திரத்தை எந்த சக்திக்கு முன்னும் பணயம் வைத்ததில்லை. பல நூற்றாண்டுகளாய் நடைமுறையிலிருந்து வரும் சம்பிரதாயங்கள், மரபுக்கு உட்பட்ட கருத்துக்களை எதிர்த்து சொந்தக்கருத்தை வெளியிடும் சுதந்திரத்தை அவனுக்கு சமுதாயம் அளிக்குமா என்பதுதான் கேள்வி. ஆனால், இப்படியான சுதந்திரத்தை கலகக்காரனான (Rebel), எழுத்தாளன் யாரிடமும் கேட்டுப்பெறுவதில்லை. தனது பிறப்புரிமையினை எதிர்ப்புக்குரலை எழுப்பிக்கொண்டே இருக்கிறான். அது பலருக்கும் சுவைப்பதில்லை என்பதை முன்கூட்டியே தெரிந்திருந்தும்கூட, செக்கோஸ்லேவியா நாட்டு கவிஞன் ஜாரொஸ்வாவ் ஸீஃபெர்ட் (Jaroslav Seifert) கூறுகிறான்: "ஒரு சாதாரண மனிதன் மௌனமாகயிருந்தால் அது நிர்வாகத் தந்திரமாக இருக்கக்கூடும். ஆனால், ஒரு எழுத்தாளன் மௌனமாகயிருந்தால் அவன் பொய் சொல்கிறான் என்றாகிவிடும்" (when an ordinary person is silent, it may be a tactical manoeuver. If a writer is silent, he is lying).

அறிவும் உணர்ச்சியும் இணைந்த வாழ்வியலை அறிந்து சொன்னவன் அறிஞன்; உணர்ந்து சொன்னவன் கவிஞன். இதனை முழுமையாகச் செய்தவர் புதுமைக் கவிஞர் பாரதி. பாரதியின் சுவட்டை தன் தலைக்கிரீடமாகக் கொண்டவர் பாரதிதாசன். பாரதியும் பாரதிதாசனும் சமுதாய மாற்றத்தைக் காணவேண்டி தங்களது கவிதைப் படைப்புகளில் எவ்வாறு ஒன்றுபட்டும், வேறுபட்டும் உள்ளனர் என்பதைக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம். இங்கே எடுத்துக்கொள்கிற சமுதாயக் கொள்கை மேல்நிலை ஆக்கமும், மேற்கத்திய ஆக்கமும், (Sanskritization and Westernization) தேசியமும், கீழ்நிலை ஆக்கமும், (Nationalism and De-sanskritization) சேர்த்து ஆயப்படுகிறது.

சமுதாய ஆற்றல்களே ஒரு கவிஞனையும் அவனுடைய படைப்பையும் உருவாக்கி நிலைப்படுத்துகின்றது. சமுதாயத்தின் ஒரு வெளிப்பாடுதான் இலக்கியம் என்றும், சமுதாய ஆற்றல்கள் தவறாமல் கவிஞனின் போக்கையும், அவனது படைப்பையும் உருவாக்குகின்றன. பாரதியையும், பாரதிதாசனையும் சமுதாய ஆற்றல்கள் தாக்கம் கொள்ள, பல மாற்றங்கள் தோன்றி ஒரு கால எல்லைக்குள் வாழ்ந்தனர். ஏறக்குறைய இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் முதல், அரைநூற்றாண்டு வரை இந்தியாவில் முந்தின அண்மைக்கால நூற்றாண்டுகளில் நிகழ்ந்ததைக் காட்டிலும் சமுதாய அளவில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அடிமை இந்திய அரசியலில் விடுதலைக்குப் போராடி அதை அடைந்ததும், சமுதாயச் சீர்திருத்தம் நடந்ததுமாகும். பாரதியும் பாரதிதாசனும் சமுதாய மாற்றத்தை எதிர்நோக்கியே பாடினர்.

"என்றன் பாட்டுத் திறத்தாலே இந்த
வையத்தைப் பாலித்திட வேணும்"

என்று பாரதி பாடியதை சமுதாய மாற்றத்திற்கான முதல் அடிக்கல்லாகக் கொள்ளலாம். பாரதிதாசன், "தமிழால் பாரதி தகுதி பெற்றதும், தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்" எவ்வாறென்பதை பாடியதால், சமுதாயத்தால் கவிஞன் தாக்கம் பெறுகிறான். அதோடு சமுதாயமும், அவனால் தாக்கம் பெறுகிறது.

இலக்கியப் படைப்பாளன் சமுதாயச் சித்திரங்களை நடப்பியலாக உருவாக்குகிறானா? என்று பார்க்க வேண்டியது அவசியம். இவ்விரு கவிஞர்களின் படைப்பிலக்கியங்கள் சமுதாய இயக்கத்தின் பார்வையில் தோன்றியவை. இருபதாம் நூற்றாண்டின் முதல் பத்துக்களில் இந்தியப் பண்பாடு ஒரே அலைவீச்சாக இல்லாமல் பல நீரோட்டங்களின் சேர்க்கையதாகக் குழம்பியிருந்தது. இதனால் இந்திய அறிஞர்கள் மேற்கத்திய வழிமுறைகளையும் கருத்துக்களையும் கண்மூடிப் பின்பற்றி நடக்கத் தொடங்கினார்கள். அவர்களுக்கு ஆங்கிலக்கல்வி இதற்குத் துணையாக அமைந்தது. இந்தக் காட்சியைக் கண்ட பாரதி கண்மூடித் தழுவல் முறையை எதிர்த்து நின்று, தனது தனித்தன்மையை உருவாக்கும் அளவில் தாக்கம் கொண்டு கவிதை படைத்தார். ஆங்கிலக் கவிஞர்களில்

ஷெல்லிதான் பாரதியுடன் நெருங்கி வருகிறார். ஷெல்லி, கட்டமைந்த நிறுவனங்களின் கொடுங்கோன்மைக்கு எதிராகப் புரட்சி செய்தவர். மன்னர்களையும் மதக்குருக்களையும், வெறுப்புடன் தாக்கிப்பாடினார். "பழையயுகம் மாறி புதுயுகம் பிறக்க இருக்கிறது என்ற கருத்தமைப்பு அவரிடமிருந்து. பெண்விடுதலையைச் சீர்திருத்த நோக்கில் பாடினார். பாரதியிடம் ஷெல்லியின் மூலம் இந்த மேற்கத்திய கருத்துக்களின் தாக்கம் இருக்கிறது. தனது வசனக் கவிதையில் அமெரிக்க கவிஞர் வால்ட்விட்மனின் தாக்கம் ஏற்பட்டதால் வேத நெறியிலும் கூட புதுமையைத் தொட்டுக்காட்டும் போக்கு சிறப்படைகிறது". மேல்நிலையாக்கம் சமயநெறிப்பார்வையாகவும், மேற்கத்திய ஆக்கம் அறிவியல்நெறிப் பார்வையாகவும் அமைவது. இரண்டு வழிமுறைகளும் ஒன்றுக் கொன்று தொடர்பாக அமையாமல் மோதலில் முரண்படுவது குறைந்த அளவிலில்லாமல் மிகுதியாகக் காணப்படுவது பாரதியின் படைப்பில் காணப்படும் உண்மைநிலை. பாரதி, மேல்நிலை ஆக்கத்தின் மூலம் மேற்கத்திய ஆக்கத்தைக் கொண்டு வந்து சேர்க்கிறார். ஆனால், பாரதிதாசன் மேல்நிலை ஆக்கத்திற்கு எதிராக மேற்கத்திய ஆக்கத்தை ஏற்கிறார். சமயக்கருத்தமைப்பு (Religious concept) இருவர்க்கிடையிலும் வெவ்வேறாக அமைந்ததே காரணம்.

## தேசியமும் கீழ்நிலை ஆக்கமும்

தேசியம் என்பது தற்கால சமுதாய இயக்கம். இதன் தோற்றம் பதினெட்டாம் நூற்றாண்டின் இரண்டாம் பகுதியில் ஏற்பட்ட பிரெஞ்சுப் புரட்சியுடன் பிணைந்தது. என்றாலும், இதன் வேர்கள் உலக வரலாற்றின் பழங்காலத்திலிருந்தே அமைந்து வருகின்றன. "அரசியல் அமைப்பின் சட்டவடிவத்தில் உருவான தாய்நாட்டின் அரசு தரும் செயல்வடிவான கருத்துறுதிதான் தேசியம்" என்று ஹான்ஸ்கோன் கூறுகிறார். இதன்படி தேசியம் என்பது பழைய நிலவுடைமையின் போக்கிலிருந்து விடுபட்டும், நாட்டு மக்களின் விருப்பங்களிலும் ஆதரவிலும் நிறுவப்பெறுகிற அரசியல் ஒருமையே என்பது புலனாகிறது. ஆங்கில ஆட்சிக்கு எதிராக தேசிய உணர்வு தோன்றியது. "இந்திய மக்கள் இரயில் மூலம் போக்குவரத்தும், அச்சுப்பொறி மூலம் நூற்கல்வியும், தபால்-தந்தி மூலம் செய்திப் பரிமாற்றமும், புதிய தொழில்நுட்பத்தின் மூலம் தொழில் வளர்ச்சியும் பெற்று வந்தாலும், இவைமட்டும் தங்களை உயர்த்தி விடாது என்றுணர்ந்ததால்

ஏற்பட்ட எதிரிடையானப்போக்கே இந்திய தேசியம். இதன் வழியே இந்தியாவின் மீது நாட்டுப்பற்றும், அத்துடன் மாநிலத் தாய்மொழி மீது மொழிப்பற்றும் ஒன்றுக்கொன்று மோதலில்லாமல் இணைந்ததொரு தேசியத்தை பாரதி கண்டார். பாரதிதாசன், இந்திய நாட்டுப்பற்றும் தமிழ் மொழிப்பற்றும் மோதல் கொண்ட மாநில ஆக்கம் (Regionalism) உடையவர். இந்தியத் தேசியத்துக்கு பாரதி கண்ட இணைந்து செல்லும் உடன்பாட்டு இயல்புகளுடன் எதிர்மறை இயல்புகள் கொண்டது".

பாரதிதாசனின் இலக்கியப் பயணம் சமுதாயவியல் கோட்பாடு சார்ந்த தேசியத்தின் செயற்பாட்டை பாரதி, பாரதிதாசன், படைப்புகளில் கொண்டவை என்பதுடன் கீழ்நிலை ஆக்கத்திற்கு எதிரானவை. சமஸ்கிருதக் கல்வி, சாத்திர அறிவு, சடங்குமுறை ஆகியவைகளை மேற்கொள்ள முடியாமல் தாழ்ந்து போவதும், அந்த நிலையில் தங்களது அல்லாத பழம்பெரும் மரபை ஏற்றுக்கொள்வதும் கீழ்நிலை ஆக்கமாகும். அதாவது அந்தணரல்லாத சாதிமக்கள் அந்தணவகையை மேற்கொள்ளாமல், பழம்பெரும் மரபு வகையை ஏற்றுக்கொள்வது, மேல்சாதியாக இருந்த அந்தணர்கள் தங்கள் மேல்நிலையிலிருந்து விலகி பழந்தமிழ்ப் பண்பாட்டுடன் தொடர்புடைய கீழ்நிலை ஆக்கத்துடன் ஒற்றுமைப்பட்டதும் பிற்கால உண்மையாகும். "தேசியமும், கீழ்நிலை ஆக்கமும் முறையே பாரதி, பாரதிதாசனிடம் மிகுதியாக இருந்தது. அந்தணர், அந்தணர் அல்லாதவர் மொழியைப் பேசுவதும், சைவர்கள் அசைவ உணவு உண்பதும், நந்தனார்சரித்திர கீர்த்தனையில் வேதியர், பக்தனாய் மாறி, நந்தனாரைத் தன்குருவாக ஏற்றுக்கொண்டதும், இவை போன்றவை கீழ்நிலை ஆக்கக் கோட்பாட்டிலடங்கும்". மேல்நிலை ஆக்கம் வடமொழியும், தமிழும் கலந்த மணிப்பிரவாளமாக எழுதப்பட்டன. இதிகாச புராணச் சொற்களும் வேதமந்திரச் சொற்களும் கலந்தமைந்தவை. பாரதி பாடிய பக்திப்பாடல்களிலும் பாரதிதாசனின் தொடக்கநிலைப் படைப்பான சுப்ரமணியர் துதியமுதிலும் மேல்நிலை ஆக்கமுறையில் மொழி அமைப்புக் கூறுகளைக் காணலாம். மேற்கத்திய ஆக்கத்தின் விளைவுகளில் ஒன்று, ஷெல்லி போன்ற ஆங்கிலப் புனைவியல் கவிஞர்களின் (English Romantic Poets) பேச்சுமொழி எளிமையைப் பின்பற்றிப் பாடும் கவிதைப் போக்கு. மன்றொன்று, ஆங்கில மொழியிலுள்ள சானெட் (Sonnet) என்ற பதினான்கு அடிப்பாவைப் போன்ற செய்யுள் வகையை வழக்கொழிந்த சொற்களுடன் கலந்து பாடும் கவிதைப்போக்கு.

புதிய சிந்தனைகளையும் கொள்கைகளையும் குறிக்கிற, புதிய சொற்களை மேற்கொண்டு பாடுவது மற்றோர் இயல்பு. இதனால் உருவானது புதுக்கவிதையின் வடிவம். புனைவியல் கவிஞர்களின் பேச்சு மொழி எளிமையில் பாரதியும் பாரதியைப் பின்பற்றி பாரதிதாசனும் பாடினார். பழைய பக்திப் பாடல்களின் சொற்களையும், சொற்றொடர்களையும் கலந்து எழுதி, புதிய அரசியல், சமுதாய உள்ளடக்கத்தை உணர்த்துவது தேசியத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றாக இருந்தது. நாட்டுப்புறப்பாடல்களின் தாக்கத்தில் பேச்சுமொழியும் ஒலிநய அமைப்பும் கலந்து தேசியத்தைப் பாடுவது மற்றொரு படைப்புமுறை. இத்தகைய இசைப்பாக்களின் இயக்கம் தேசிய இயக்கத்தினை உருவாக்கியதில் பாரதி, பாரதிதாசன் இருவரும் முக்கிய இடம் பெற்றிருந்தனர். "பக்தி இயக்கக்காலத்தில் மேல்நிலை ஆக்கமே செல்வாக்குப் பெற்றிருந்தது. அதற்கு காரணமாக இருந்தவர்கள் அன்றைய சாதி அமைப்பில் உயர்ந்திருந்த அந்தணர்களும் வேளாளர்களும்". ஆங்கில ஆட்சிக்கு முந்திய காலகட்டத்தில் அரசவகை மேல்நிலை ஆக்கம் இருந்தது. ஆங்கில ஆட்சியில் நிலைமைமாறி கல்வி, சமுதாய, பொருளாதாரத் திட்டங்களின் நன்மைகளை அந்தணர்களே பெரும்பாலும் பயன்படுத்திக் கொண்டதால் மேல்நிலை ஆதிக்கம் வளர்ந்தது. இதனால் ஆங்கில ஆட்சி காலத்தில் ஆரியசமாஜமும், பிரம்மஞான சபையும் இராமகிருஷ்ணர் இயக்கமும் தோன்றின. தமிழ்நாட்டில் இராமலிங்கர் இயக்கம் இடைக்கால பக்திநெறியின் தாக்கம் பெற்றிருந்தாலும் அந்தணர் கருத்தமைப்பின் சீவகாருண்ய ஒழுக்கமும் சமயநிலை கடந்த புதிய மனிதன் என்ற கொள்கையை கொண்டதினால் மேற்கத்திய ஆக்கம் உடையது என்று மதிப்பிடலாம்.

"பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவில் தொழில்வளர்ச்சி தோன்றியதின் பின்னணியில் ஆங்கிலக் கல்வி கற்ற இந்திய அறிவாளிகள், ஆங்கில ஆட்சி தங்களை ஓரவஞ்சனையுடன் நடத்துகிறது; இந்தியாவின் பண்பாடும் பழம்பெருமையும் புறக்கணிக்கப்படுகிறது என்று கண்டார்கள். இந்தச் சூழலில்தான் இந்துசமய மறுமலர்ச்சி தோன்றியது". இந்துசமய மறுமலர்ச்சி என்ற மேல்நிலை ஆக்கச் சூழலில்தான் பாரதி, பாரதிதாசனின் இளமைப்பருவங்கள் தோய்ந்திருந்தன. எட்டயபுர புரவலர்களின் தூண்டுதலில் வைதீகப்பற்றுடன் தெய்வங்களின்மேல் காவடிசிந்துகளைப் பாடினார் இளங்கவிஞர் சுப்பையா. பக்திப்பாடல்களை எழுதிப்பாடி

துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டுக்கொண்டு சமயப்பிரச்சாரம் செய்து மகிழ்ந்தார் கனகசுப்புரத்தினம் என்ற இளைஞர். இவ்விரு இளங்கவிகளும் வைதீகச் சூழலில் பக்தி இயக்கத் தொடர்ச்சியான மேல்நிலை ஆக்கத்துடன் பாடிப் பரவசம் எய்தனர். "காசியில், அத்தை குப்பம்மாளின் வீட்டில் பாரதி வாழ்ந்து, அலகாபாத் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக்கொண்டிருந்தபோது அத்தையின் கணவர் கிருஷ்ணசிவன், மார்கழித் திருவாதிரை விழாவில் ஓதுவார் வராததால் பாரதி, திருவெம்பாவையையும் நந்தன் சரித்திரக் கீர்த்தனையையும் உருக்கமாகப்பாடி அன்றைய திருவாதிரை நாளைச் சிறப்படையச் செய்தார்". இதிலிருந்து பாரதி, காசியிலிருந்தபோது (1989–1901) எட்டயபுரத்தில் தெரிந்திருந்த வைதீகமரபை மறவாமல் வைத்திருந்தார் என்று அறிந்து கொள்ள முடிகிறது. காசியில் இந்தியும் வடமொழியும் படிக்க பாரதிக்கு வாய்ப்பு கிடைத்ததால் மேல்நிலை ஆக்கத்தின் தாக்கம் பெற அவருக்கு ஏதுவாயிற்று.

புதுச்சேரியில் அரிசனச்சாதியைச் சேர்ந்த கனகலிங்கம் என்பவருக்கு பூணூல் அணிவித்து அந்தணராக்கினார் பாரதி. கீழ்ச்சாதிக்காரர் ஒருவரை மேல் சாதிக்காரராக மாற்றிய இச்செயல் மேல்நிலை ஆக்கம். இதில் பாரதியை நோக்கும் போது, அந்தணர்களின் உயர்சாதி மனப்பான்மையை எதிர்க்கும் கொள்கை தெரிகிறதால் இதை அந்தணர்களின் கீழ்நிலையாக்கம் என பாரதி கொள்வதாக மதிப்பிடலாம். இன்னொரு பக்கம் கனகலிங்கத்தை நோக்கும்போது, கீழ்நிலையிலுள்ள 'அரிசனன் அந்தணநிலைக்கு உயர்வது' என்ற கொள்கை தெரிவதால் இதை மேல்நிலையாக்கம் என்று கூறலாம். ஆக ஒரே செயல் மேல்நிலை ஆக்கமாகவும், கீழ்நிலை ஆக்கமாகவுமிருக்கலாம் என்பது பயன்படுத்துவோரையும் பயன் பெறுவோரையும் பொறுத்தது. புதுச்சேரியின் உப்பளம் அரிசனக் குடியிருப்பில் உள்ள முத்துமாரி என்ற சிறு தெய்வத்தின் மீது பாரதி பாடிய பாடலைப் பற்றி கனகலிங்கம் பின்வருமாறு எழுதுகிறார். "சாதி கர்வம் குடிகொண்ட பெரிய கோவில்களைப் பாடாமல் அரிசனங்களின் முத்துமாரியை உலக நாயகியே" என்று பாடினார் என்கிறார். பாரதியின் செல்லம்மாள் வெளியிட்ட 'தேசியகீதம்' முதல் பாகத்தில் இப்பாடல் உள்ளது. இதனால் சிறுநெறி (Little Tradition)–யில் நடைபெற்று வந்த முத்துமாரியின் வழிபாட்டை பெருநெறிக்கு (Great Tradition) உரியதாக மாற்றிய மேல்நிலை ஆக்கச்செயல் புலப்படுகிறது.

*பழமையில் பாரதியும், பாரதிதாசனும்*

இளமைதொட்டு, 1930ஆம் ஆண்டு வரையில் பாரதிதாசன் பழமையில் ஊறியவராகவே வாழ்ந்திருந்தார். இதை அவருடைய மகன் மன்னர் மன்னன் ஒரு தொடர் கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார். “தந்தையார் வணிகர்; அண்ணன் கோள்நிலை வல்லுநர், கவிஞர் இவர்கட்கு ஒருபடி மேலாக சடங்குகளில் திழைத்து அமாவாசை, கிருத்திகை போன்ற நாட்களிலும் ஏனைய விழா நாட்களிலும் சடங்கு முறையோடு நடந்து வந்தார். பிள்ளையார் விழாவிற்கு தாமே மண்கொணர்ந்து பிள்ளையார் உருவம் சமைத்து வழிபாடு நடத்தினார். மற்றெல்லோரும் ஒப்புக்கு நோன்பு இ ருக்கும்போது ஈரத்துணியோடு முழுநாளும் உண்ணாமல் இருந்து வந்தார். மாரியம்மன் விழாவாயிருந்தாலும் அதற்கான பாடலை எழுதி அரங்கேற்றி அச்சிட்டு வழங்குவார். தாமே இசையோடு பாடுவார். திருமண வாழ்த்து, அழைப்பிதழ் எழுதும்படி எவரேனும் கோரினால், விநாயகர் காப்பு, சரசுவதி, இலக்குமி வாழ்த்து முதலியவை எழுதிவிட்டே அழைப்புச் செய்தியைப் போடுவார்”. இந்த வாழ்க்கை பாரதிதாசனிடம் இளமையிலிருந்த ஈடுபாடு காரணமாகலாம் என்று மதிப்பிடலாம். “ஒருமுறை புதுவை கலைமகள் கழகம் சார்பில் ‘உணர்வும் அறிவும்’ என்ற தலைப்பில் பேசினார். திருமங்கையாழ்வார் பாடிய ‘வாடினேன் வாடி’ என்று தொடங்கும் பாடலைச் சான்றாகக் காட்டி, அதில் நாடினேன் நாடி என்ற பருப்பொருளைப் பற்றிய உணர்வு நிலை என்றும் கூறியதை அவையோர் அந்த ஏற்காதபோது மறைமலையடிகளும் ஞானியாரடிகளும் கூறிய கருத்துக்களை மேற்கோள்காட்டி உணர்வும் அறிவும் வெவ்வேறானவை” என்பதை நிறுவினார்.

மேற்கத்திய ஆக்கச் சூழலில் *பாரதி, பாரதிதாசனின்* இளமைப் பருவங்கள் தோய்ந்து கழிந்திருந்தன. எட்டயபுர மன்னர் தலைமையில் கூடிய புலவர் அவையை விரும்பாமல், ஷெல்லி மன்றம் என்ற பெயரில் இலக்கியக்குழு ஒன்றைத் தோற்றுவித்தார். “ஷெல்லியின் புரட்சிக்கருத்துக்கள் பாரதியின் இளமை உள்ளத்தைத் தாக்கம் செய்திருந்த உண்மை இதனால் புலப்படுகிறது. இது போல் பாரதிதாசன்தமது இளமைக்கல்வியில் பிரெஞ்சு மொழியின் மூலம் பிரெஞ்சுப் புரட்சியின் கொள்கைகளை உணர்ந்து கொண்டார்”, ஆங்கிலக்

கவிஞன் யூகோவை, பாரதியும் பாரதிதாசனும் புகழ்ந்துள்ளனர். "ரஷ்ய புரட்சிக்கு வழிகாட்டிய லெனின் மீது இருவரும் பெரும் மதிப்புக் கொண்டிருந்தனர்". இதனால் பிரெஞ்சு, ரஷ்ய நாடுகளின் புதுமை ஆக்கத்தில் இருவருக்கும் இருந்த நம்பிக்கை தெரிகிறது.

மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் **1904** ஆகஸ்டு முதல் மூன்று மாதங்கள் தமிழாசிரியராகப் பணியாற்றிய பாரதி, அதே ஆண்டின் இறுதியில் சென்னைக்குச் சென்று 'சுதேசமித்திரன்' இதழ்ப்பணியில் சேர்ந்தார். ஆசிரியர் ஜி. சுப்ரமணியஐயர் இட்ட கட்டுப்பாடான பணியின்படி ஆங்கிலத்திலிருந்து செய்திகளைத் தமிழில் மொழிபெயர்த்தார். சுதேசமித்திரனிலிருந்து கொண்டே சக்ரவர்த்தினி என்ற மாதஇதழை நடத்தினார். "பாரதியைப் போலவே பாரதிதாசனும், 'கவிதாமண்டலம்', 'குயில்' என்ற இதழ்களை நடத்தினார்." இதனால் இருவரும் மேற்கத்திய ஆக்கத்தின் விளைவான இதழ்ப்பணிகளில் முன்னோடிகளாக விளங்கினர் என்பது உறுதியாகிறது. ஆங்கிலக்கல்வியில் நன்மையில்லை என்று ஒரு சமயம் கருதிய பாரதி "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும் என்ற புதிய கருத்தமைப்புக்கு மாறினார்." பாரதிதாசன், "ஆங்கில நூல் அறிவிற்குச் சான்றிருந்தால் அது போதும்" என்று ஆங்கிலக் கல்வியை வரவேற்றார்.

பல சமயங்களில் பாரதிக்கும் செல்லம்மாளுக்கும் அந்தணர் பழக்க வழக்கங்கள் பற்றிய வாதங்கள் ஏற்பட்டதுண்டு, ஒரு முறை செல்லம்மாள், *"கல்யாணம் பண்ணாமல் பெண்ணை உட்கார* வைத்திருக்கும் இவர் பிராமணராம் என்று கூறியதற்கு ஆச்சாரத்தை எதிர்த்துப்பேசி, பதினெட்டு முதல் இருபது வயதுதான் பெண்களுக்குரிய திருமண வயது என்று கூறினார். பாரதி முகச்சவரம் செய்து கொண்டு தீட்டுப்பட்ட செயல்களைச் செய்தார் என்று செல்லாமாள் கூறிட அதற்கு பாரதி, உயர் குலத்துப் பிராமணன் பிணம் அறுக்கிறான், டாக்டர் படிப்பில் *அதுதான் முதல் பாடம்" என்று விளக்கமளித்தார்.* இந்த வாதங்கள் ஒரு உண்மையைக் காட்டுகிறது செல்லம்மாள் சார்ந்திருந்த கருத்தமைப்பு அந்தணவகை மேல்நிலை ஆக்கம் ஆகும். அதாவது, 'இருந்தபடியே இருத்தல் அல்லது தன் நிலையைப் பாதுகாத்தல்' என்பது ; பாரதி சார்ந்திருப்பது மேற்கத்திய கருத்தமைப்பு.

*பொதுமை நோக்கு*

"புதுவை சுயர்கூப் வீதியிலுள்ள தொடக்கப்பள்ளியில் வேலைபார்த்த பாரதிதாசன், ஏழை மாணவர்களுக்கு வழங்கப்படும் பகலுணவு திட்ட நடைமுறையை மேற்பார்வையிட்ட போது ஒரு மாணவன், 'சாம்பாரில் ஒரே கசப்பு' என்று கூறிவிட்டான். சுரைக்காய் சாம்பாரை சுவை பார்த்து உண்மையை தெரிந்து கொண்ட சுப்புரத்தினம், கல்வி அதிகாரியிடம் நேரே சென்று குடியரசுக் கொள்கை நிலைத்து நிற்க கல்வியே அடிப்படை என்பதை உணர்ந்து, இலவசக் கட்டாயத் தொடக்கக் கல்வியையும் பகலுணவுத் திட்டத்தையும் பிரெஞ்சு அரசாங்கம் நடத்திவருகிறது. அதில் மண்ணைப் போடுகிறது எங்கள் பள்ளி" என்று கூறியதை புரிந்து கொண்ட அதிகாரி, சுப்புரத்தினத்தின் அடிப்படையான தத்துவப் பொதுநோக்கத்தைப் பாராட்டினார். இது ஆசிரிய வாழ்க்கையில் பெற்ற மேற்கத்திய ஆக்கத்தின் தாக்கமாகும்.

சாதிவேறுபாட்டுக்கு எதிரான கண்ணோட்டத்தில் பாரதிதாசன் அந்தணரல்லாதவர் இயக்கத்திலும் பகுத்தறிவு சீர்திருத்தம் என்ற பார்வைகளிலும் ஈடுபாடு மிகுந்தவராக மாறினார். முன்பு துதிப்பாடல் பாடிப் பிரச்சாரம் செய்துவந்த பாரதிதாசன்,

> *"மாடுகளும் வழக்கத்தால்*
> *செக்கைச் சுற்றும்,*
> *மடையர்களும் இயற்றிடுவார்*
> *கடவுட் பாடல்"*

என்று பாடும் அளவிற்குத் தம் மனப்பான்மையில் மாற்றமடைந்தார். மக்களை பல பிரிவுகளாகப் பிரிக்கும் உயர்வு தாழ்வு மனப்பான்மை உடைய சாதிய அமைப்பு இருப்பதால் சமுதாய சீர்திருத்தங்கள் தேசிய இயக்கத்தின் செயல்திட்டங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. பெண்கல்வி, சமஉரிமைக் கோட்பாடு இணைந்து வலுப்பெற்றது. தேசிய இயக்க வளர்ச்சியால் சமயநெறியை சடங்குகளில் மட்டுமே, பின்பற்றி வந்த அந்தணச்சாதி குருக்களின் செல்வாக்கு ஐயப்பாட்டுக்குரியதாகி விட்டது.

முழுநேர அரசியல்வாதியாக இருந்து பேச்சு, செயல், போராட்டம் என வாழ்வது ஒருமுறை. இலக்கியவாதி, பாடல், பத்திரிக்கை எனப் போராடி வாழ்வது மற்றொருவகை. பாரதி இரண்டாவதைத் தேர்ந்தெடுத்தார். இதுவே வாழ்க்கை முழுவதும் அமைந்தது. அரசியல்வாதி, பத்திரிக்கை ஆசிரியன், தமிழாசிரியன், கவிஞன், தத்துவவியல்வாதி என்ற ஐங்கோணங்களிலும் பாரதி நின்று கொண்டு நாட்டையும் தன்னையும் பார்த்தார். இதில் தன்னைக் கவிஞன் என்ற கோணத்தின் பார்வையூடே மற்ற நான்கு கோணங்களையும் இணைத்துக் கொண்டதுதான் உண்மை.

புதுச்சேரியில் பாரதியுடன் பத்தாண்டுகள் சுப்புரத்தினம் இருந்தபோது இவரது கவித்திறனைக் கண்ட பாரதி, 'எழுக நீ புலவா!' என்று பாராட்டிய நாளிலிருந்து கவிஞன் என்னும் புதுமையாக்கத்துடன் மாறினார். வாழ்க்கையில் தமிழாசிரியராக இருந்து கவிதைகள் எழுத முயன்றிருந்தாலும், கவிஞராக உருவானதில்லை. கவிஞனாக வாழவிரும்பும் வேறுசிலர் அரசியலுக்கு நெடுந்தொலைவில் நின்றுவிடுவதுண்டு. தமிழாசிரியராக வாழ்ந்து கொண்டே பத்திரிக்கைத்துறையில் படைப்பிலக்கியம் உருவாக்கியவரைக் காண்பதரிது.

சீர்திருத்தவாதியாக இருந்து கவிஞராக உருவாவது பலருக்கும் வாய்ப்பதல்ல. இப்படி ஒன்றுடன் ஒற்றினை இணைக்க முடியாமல் போகிறது. வாழ்க்கையில் ஒரு கோணத்தோடு வேறொரு கோணம் இணையப்பெறுபவர் வாழ்க்கையில் தமிழாசிரியன், கவிஞன், அரசியல்வாதி, பத்திரிக்கை ஆசிரியன், சீர்திருத்தவாதி என்ற ஐங்கோணங்கள் இணைந்துள்ளதைக் காணலாம். கவிதையும் சீர்திருத்தமும் அவர் தொடர்ந்து பற்றிக் கொண்டு வந்த துறைகள். இந்த இரண்டினுள் சீர்திருத்தம் என்பதை உள்ளடக்கமாகக் கொண்டு கவிதையைத் தமது தலைக்கோணம் என்று வாழ்க்கை முழுவதும் மதித்து வாழ்ந்தார் சுப்புரத்தினம். கவிஞன், தேசிய அரசியல் என்ற இவ்விரு கோணங்களுக்கும் உள்ள தொடர்பு 1906 முதல் 1939 வரை நீடித்திருந்தது.

*சாதியற்ற சமுதாயம்*

பாரதி, பாரதிதாசனின் படைப்புகளில் சாதி அமைப்பு மாற்றங்களும், சமுதாய கருத்துக்களின் தாக்கங்களும் முக்கிய பாடுபொருள்களாக உள்ளன. "பாரதி, பாஞ்சாலி சபதத்தைப் பாடிய நோக்கங்களில் ஒன்று, பாரத நாட்டின் சாதி அமைப்பைக் காட்ட வேண்டும் என்பதும், பாரத சமுதாயம் ஆங்கில அரசுக்கு அடிமைப்பட்டதையும், அடித்தளத்திலிருந்து விலகிடத் தீவிரப் போராட்டத்தில் குதித்ததையும் சொல்வதற்காகவும் பாடப்பட்டிருக்கிறது." சாதிப் பிரிவுகளே இல்லாத புதிய சமுதாய அமைப்பே உயிர் பெற்ற தமிழர் பாட்டில்,

*"காலத்திற் கேற்ற வகைகள் - அவ்வக்*
*ஞால முழுமைக்கும் ஒன்றாய் - எந்த*
*நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை*

என்று கற்பனை செய்துள்ளார். மேற்கத்திய ஆக்கத்தின் செயற்பாட்டில் சாதி அமைப்பே இல்லாத புதிய சமுதாயத்தைக் கொண்டு வரவேண்டும் என்பதே அவரின் கருத்து.

*'புதுமைப் பெண்' ணில்,*
*'மூத்த பொய்மைகள் யாவும் அழிப்பராம்*
*மூடக்கட்டுகள் யாவும் தகர்ப்பராம்'*

என்று பாடிய மேற்கத்திய ஆக்கத் தாக்கம் சாதியமைப்பை தகர்க்கவே. பாரத மக்களின் அச்சத்தையும், மூடவழக்கங்களையும், சாதிப்பிரிவுகளையும், சமயசண்டைகளையும், வறுமையையும், நோயையும் கண்டபோதெல்லாம் நெஞ்சு பொறுக்காத பாரதி, இந்நிலைக்குக் காரணம் பொறியற்ற விலங்குகள் போல் வாழும் அடிமைத்தனம் என்று கூறி,

*'கொஞ்சமோ பிரிவினைகள்? - ஒரு*
*கோடி என்றால் அதுபெரிதாமோ'*

என்ற செயல் அமைப்பிலான வரிகள் தேசிய நோக்கத்துடன் சாதிப்பிரிவுகளைத் தகர்த்தெரியத் தூண்டுவன.

*'ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ*
*தரும மொன்றி யற்றலாய் போ போ போ'*

*'பறைய ருக்கும் இங்கு தீயர்*
*புலைய ருக்கும் விடுதலை'*

*'பார்ப்பானை ஐயரென்ற காலமும் போச்சே-வெள்ளைப்*
*பரங்கியரைத் துரையென்ற காலமும் போச்சே'*

*'எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம்*
*எல்லோரும் இந்திய மக்கள்'*

என்ற சமுதாய மாற்ற நெறியின் அடிப்படையில் சாதி அமைப்பு மாற்றங்களை மேற்கண்டவாறு வேண்டுகிறார்.

இலக்கியம் சமுதாயத்திலுள்ள பல்வேறு நிலைகளைச் சித்தரித்துக் காட்டும் சான்று நூல். இலக்கியத்திலிருந்து சமுதாய மக்கள் பிரிவுகளையும் கதைப் பாத்திரவகைகளையும் பகுப்பாய்வு செய்து பார்க்கிறபோது, இலக்கியத்திலிருந்து வேறுபட்ட சமுதாயப் போக்குகளை வைத்து மதிப்பீடு செய்வது அவசியமாகும். அந்த வகையில் பாரதிதாசனின் கவிதைகளில் சாதி அமைப்பு மாற்றக் கருத்துக்கள் நிறைந்துள்ளன.

*'ஓர் குடிமற்றோர் குடியைக் கெடப்பார்க்கும் இந்த*
*உலகத்தை நினைத்திடில் உளம் வேர்க்கும்'*

என்று 'சுப்பிரமணியர் துதியமுது'வில் பாடுகிறார். 'புரட்சிக்கவி' யில் அரசகுலத்தைச் சார்ந்த அமுதவல்லியை மேற்குலம் என்றும், உதாரண் கீழ்குலம் என்றும் சொல்லுமிடத்தில்,

*'சாதி உயர்வென்றும் தனத்தால் உயர்வென்றும்*
*கத்திமுனை காட்டிக் காலமெல்லாம் ஏய்த்துவரும்*
*பாவிகளை......................................'*

*'ரத்தவெறி கொண்டலையும் நால்வருணம்*
*வேந்தன் சதுர்வருணம்'*

*'நால்வருணங்கள் விதித்தார் நாட்டார்கள்-அன்னவற்றில்*
*மேல்வருணம் கோல் கொண்டு மேதினியை ஆள்வருணம்'*

*'வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்களென்றால்'*
*'இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி*
*இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே'*

இப்படி பல இடங்களில் சாதி அமைப்பை சாடுகிறார். 'பாண்டியன் பரிசில்' அரசர்கள் 'தாங்கள் சாதி அமைப்பில் மேல்நிலை பெறவேண்டுமென்று சாதிப்பிரிவுகளை நிலைத்திருக்கச் செய்கிறார்கள்' என்ற கருத்தமைப்பு உள்ளதைக் காணமுடிகிறது. இதனை எதிர்க்கவே பகுத்தறிவுக் கோட்பாடும் விடுதலைக் கோட்பாடும் பொதுவுடைமைக் கோட்பாடும் மேற்கத்திய ஆக்கம் சார்ந்த பார்வையில் ஏற்பட்டதெனலாம். இவ்வாறு மூன்று சமுதாயவியல் கொள்கைகளையும் கூறுகிறார். மேற்கத்திய ஆக்கம் என்ற படைப்பு முறையில் பாரதியின் 'பாஞ்சாலி சபதத்'திற்கும் பாரதிதாசனின் 'புரட்சிக் கவி'க்கும் ஒற்றுமையுண்டு. நால்வருண ஏற்பாட்டில் சாதி அமைப்பை தகர்த்திட வேண்டும் என்ற கரு அமைப்பு 'புரட்சிக் கவி'யில் வருகிறது. சாதியில் உயர்ந்த பெரியோர்களில் ஒப்புக்கொள்ளப்படும் பெண்ணடிமை தீர வேண்டும் என்ற சமுதாயப் புரட்சிக்கருத்து 'பாஞ்சாலி சபதத்'தில் அமைகிறது. முடியாட்சியை தகர்த்து குடியாட்சியை வரவேற்று அரசியல் புரட்சிக்கு வழி காட்டுகிறது.

பாரதிதாசன் தான் காணவிரும்பிய புதிய உலகில் இடமில்லை. கருத்தமைவுக் கவிதையில் உணர்ச்சிக்கும் செறிவுக்கும் தொடர்ச்சிக்கும் (Complexitry and Coherence) சிறப்பிடம் தரப்பட்டு, சாதிப்பிரிவுகளை கடவுளே உண்டாக்கினார் என்ற பேச்சை மறுத்து, 'உடைவெளுக்கும் தோழரைக் கடவுள்தான் முன்னேற்றுமோ?' சமுதாயத்தில் சாதியின் பெயராலும், பொருளின் பெயராலும், ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை மாற்றிட வேண்டும் என்பதற்காகவே 'கொலை வாளினை எடுடா' என்று வலிமையுடன் குரல் கொடுக்கிறார்.

பாரதியிடமும் பாரதிதாசனிடமும் மேற்கத்திய ஆக்கம் சமயக்கருத்துக்களை விடவும் சமுதாய நோக்கங்களையே தந்துள்ளது. மேற்கத்திய ஆக்க வழியில் சமயக்கருத்துக்களை ஏற்றுக் கொள்வதென்றால் நகரவாழ்வுக்குத் தக்கபடி பஜனை, கதாகாலட்சேபம், ஆச்சாரம் போன்றவற்றை ஏற்றுக் கொள்வது, இப்படி எந்த இடத்திலும் பாரதியோ பாரதிதாசனோ தழுவி ஏற்றுக்கொண்டு பாடியதாகத் தெரியவில்லை. உண்மையில் மேற்கத்திய ஆக்கம் இந்திய மக்களின்

மரபு நிலையான சமுதாயததை மாற்றியமைக்கும் ஓர் உந்துதலாக இருந்தது. ஆனால், காலப்போக்கில் இரண்டாமிடத்திற்குத் தள்ளப்பட்டு விடுதலையின் உந்துதலைக் கொண்ட 'தேசியம்' முதலிடத்தைப் பெற்றது. இவ்விரண்டில் பாரதியை தேசியமும், பாரதிதாசனை கீழ்நிலை ஆக்கமும் மிகுதியும் ஆட்கொண்டது. பாரதியிடம் தேசியம் இந்திய மரபைப் பின்பற்றச் செய்தது. பாரதிதாசனிடம் கீழ்நிலை ஆக்கம் தமிழக மரபை நடவைத்தது. இதனை வேறொரு வகையாகக் கூறலாம். தேசியத்தில் விளைந்தப் பயன் விடுதலை (Freedom). கீழ்நிலை ஆக்கத்தால் தோன்றிய பயன் சீர்திருத்தம் (Reform). ஒரு சேர நோக்கினால் பாரதியிடம் விடுதலை உண்டு; பாரதிதாசனிடம் சீர்திருத்தம் உண்டு.

பாரதியிடம் தேசியம், சமுதாயச் சீர்திருத்தம், ஆன்மீகம் இவற்றின் ஒருங்கிணைந்த 'ஆளுமை'-யைக் காணலாம் (Synthetic Personality). பாரதியின் தொடர்பும் தாக்கமும் பெற்ற பாரதிதாசனால் தேசியத்தை தொடாமல் போயிருக்க முடியாது என்றாலும் அது குறைந்த அளவினதே. அதற்கு மாறாக பகுத்தறிவு என்ற தத்துவத்தாக்கம் பாரதிதாசனை இலக்கியச் சிறப்பில் உயர்த்தி, சமுதாய சீர்மறுமலர்ச்சிக் கவிஞர் (Poet of Social Renaissance) என்று அடையாளம் காட்டியது.

பகுத்தறிவு இயக்கம் திராவிட இயக்கம் இரண்டிற்கும் வேறுபாடுண்டு. "பகுத்தறிவு இயக்கம் ஒரு தத்துவப்பார்வை ; திராவிட இயக்கம் ஒரு இனப்பார்வை. சமயத்தின் பெயரால் சொல்லப்பட்ட மூடப்பழக்க வழக்கங்களை அழித்தொழிக்க வேண்டுவது முன்னது. ஆரிய திராவிட வேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டது பின்னது. 1920க்குப் பிந்திய சில ஆண்டுகளில் தமிழ்நாட்டில் வேறொருநிலை உருவானது. கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் மிகுந்த இடங்களை பிராமணர் பெற்று வந்ததால், பிராணரல்லாதாரின் தலைவர்கள் ஒன்று கூடித் தென்னிந்திய நல உரிமைச் சங்கம் (1916) ஏற்படுத்தினர். இதுவே பிறகு நீதிக்கட்சியானது. இதன் வளர்ச்சியாக வகுப்புவாரி உரிமைப்பங்கும் (1920) (System of Class Quotas) மொழிவழி மாநில அமைப்பும் (1956) ஏற்படக்காரணமாகியது. அப்போதுதான் ஈ.வெ.ரா.வின் சீர்திருத்தவியலான தன்மான இயக்கத்தில் பாரதிதாசன் கவர்ந்திழுக்கப்பட்டார்." புதுவையில் 38 ஆண்டுகளாக ஆசிரியர் தொழிலில் இருந்தார். ஆனால், இந்திய விடுதலை இயக்கத்தில்

நேர்முகப் பங்கு கொள்ளவில்லை. "பாரதியின் புரட்சிமனம் அரசியலில் முளைத்தது; பாரதிதாசனின் புரட்சிமனம் தமிழில் முளைத்தது." பாரதிதாசன் சமுதாய சீர்திருத்தத்தைப் பாடியதும், தாய்மொழியைக் கருப்பொருளாகக் கொண்டு பாடியதும், பகுத்தறிவுப் பார்வையோடு மானிடனைப் பாடியதும் என்ற வரிசையில் பார்த்தால் சமுதாய மறுமலர்ச்சியே முதலிடம் பெறுகிறது. அதனால், சமுதாய சீர்திருத்தம் தமிழியக்கம் – பகுத்தறிவியல் என்ற ஒருங்கிணைப்பு ஆளுமையைக் காணமுடிகிறது.

*முடிவுரை*

பாரதியையும், பாரதிதாசனையும் மேல்நிலை ஆக்கம், மேற்கத்திய ஆக்கம், தேசியம், கீழ்நிலை ஆக்கம் என்ற சமுதாய ஆற்றல்கள் தாக்கம் கொண்டுள்ளதால் சமுதாய இயக்கங்களின் பின்னணியில் இருவரின் படைப்புகளும் தோன்றின. சாதி அமைப்பு, சமுதாயக் கருத்துக்கள் இவை முக்கியமான இடங்களையும் பெற்றன. மேற்கத்திய ஆக்கத்தால் இதழியல் பணியை துவக்கினர். பாரதியிடம் மேல்நிலை ஆக்கக் கருத்துக்கள் மிகுதியாகக் காணப்படுவதற்கு அவர் வடமொழி, இந்துசமயம், இந்தியாவின் பழம் பெருமை, வேதம் மந்திரம், சடங்கு ஆகியவற்றில் நம்பிக்கை கொண்டிருந்ததால், இவைகளில் நம்பிக்கை கொள்ளாததால் பாரதிதாசனிடம் கீழ்நிலை ஆக்கக் கருத்துக்கள் மிகுதியாயின.

# சிந்தாமணி கூறும் அறம்

தி.வே.கோபாலய்யர்

சென்ற இதழ் தொடர்ச்சி.....

## 1. அருளோடு புணர்ந்த அகழ்ச்சி

தொடர்புடையாரிடத்துக் கொள்ளும் நேயமாகிய அன்பு விரிவடைந்து வேண்டியவர் வேண்டாதவர் என்னும் பாகுபாடின்றி எல்லா ஆன்மாக்களிடமும் உதவும் மனப்பான்மையைக் கொள்ளும் ஆன்ம நேயமாகும்.

மகளிர் சேர்ந்த இடத்தே இருந்து இளமையாகிய கள்ளினை உண்டு அறம் முதலியவற்றை அறிதல் இன்றிப் பயன்படாமல் மூப்பதற்கு முன்பு இளமைப் பருவத்திலேயே தவமும் தானமும் செய்தலே மனிதப்பிறவி எடுத்ததன் பயனைப் பெறுவதாகும்.

"முருந்தனைய தூமுறுவல் முற்றிழையார் சேரி
இருந்து இளமைக்கள் உண்டு இடை தெரிதல் இன்றிக்
கருந்தலைகள் வெண்தலைகளாய் கழியும் முன்னே
அருந்தவமும் தானமும் ஆற்றுமினே கண்டீர்" – 2619

என்பது விசயமாதேவியின் வாக்கு

பிறப்பு எப்பொழுது ஏற்பட்டதோ அப்பொழுது இறப்பும் உறுதியாக நிகழும். அந்த இறப்பு எப்பொழுது நிகழும் என்பதனை உறுதியாகக் கூற முடியாது. இளமையிலும் நிகழலாம். மூப்பிலும் நிகழலாம். இவ்வுடம்பு நோய்க்கு இருப்பிடம். வருத்துகின்ற நோய் ஆகிய தீயை உடைய உடம்பிலே உயிரைச் சோறாக முன்னே பெய்து கொண்டு உணர்வையே நெய்யாக கற்றலையே துவையலாகக் கூட்டி உடம்பை உண்ணும் கூற்றம் உடம்பை நிலை குலைப்பதற்கு முன்னே ஏழைகளுக்குத் தேவைப்பட்டதனை தேவைப்பட்ட காலத்துக் கொடுத்து உண்மின் ஆன்மநேயமாகிய நற்குணத்தைப் பின்பற்றி வாழுங்கள்.

"உடற்றும் பிணித்தீ உடம்பில்உயிர் மெய்திட்டு
அடுத்து உணர்வுநெய்யாக ஆற்றல் துவையாகக்
குடித்து உண்ணும் கூற்றம் ; குடில்பிரியா முன்னே
கொடுத்து உண்மின் கண்டீர் ; குணம்புரிமின் கண்டீர் ;"–2620

மானிடப்பிறவி கிட்டுவதற்கரியது. நல்ல செயல்களைச் செய்து தேவராதலும் தீய செயல்கள் செய்து கீழ்நிலைப் பிறவிகளை அடைவதும் இம் மனிதப்பிறவிலேயே செய்து கொள்ளக் கூடியவை. இதனை மறந்து ஐம்பொறி இன்பங்களுக்குரிய பொருள்கள் நிலைபேறுடையன அல்ல என்ற நினைப்பு இல்லாமல் அவற்றைத் தேடுவதிலேயே வாழ்நாளைச் செலவிட்டு அறம் என்பது கருப்பா சிவப்பா என்று கூட அறியாமல் வாழ்பவர் வாழ்க்கை வெற்று வாழ்க்கை. இவ்வாழ்க்கை வாழ்க்கையாகக் கணக்கிடப்படுவது ஒன்று அன்று.

"பிறந்தவர்கள் எல்லாம் அவாப் பெரியராகித்
துறந்து புகழ் வேண்டார் ஓர் துற்று அவிழும் ஈயார்
அறம் கரிது சேய்து என்பது யாதும் அறியாரேல்
வெறும் பொருள் அது சும்மா விடுத்திடுமின் என்றாள்." - 2622

இவையும் விசயமா தேவியின் உபதேச மொழிகள்.

தம்மை அறிவிடத்தினின்றும் தாமே நீக்கி தம் குழலிலே மாலைகளை வண்டுகள் ஒலிப்பச் சூடிக் கையில் வீரத்துக்கு அறிகுறியான வேலினை ஏந்திக் காரிகையார் மருள காமன் போல் உலாவியவர்கள் ஆண்டுகள் பல கழிந்த பின்பு கழுத்தில் கோழை திறளுதலாலே இருமியவாறு கோழையை உமிழ்ந்து தண்டை ஊன்றுகோலாக ஊன்றியவாறு தள்ளாடி நடப்பதனைக் காண்பதாலே இளமை நிலையாது என்பது பெறப்படவில்லையா?

"மைதிரண்ட வார்குழல் மேல் வண்டு ஆர்ப்ப மல்லிகை மென்மாலை சூடிக்
கை திரண்ட வேல் ஏந்திக் காமன் போல் காரிகையார் மருளச் சென்றார்
ஐ திரண்டு கண்டம் குறைப்ப ஓர் தண்டு ஊன்றி அறிவில் தள்ளி
நெய்திர ண்டாற் போல் உமிழ்ந்து நிற்கும் இளமையோ நிலையாதே காண்"
– 2626

தம் செயலால் தமக்கு உரியவாகிய இருவினைப் பயனை இந்திரனும் நுகர்கிறான். குரங்கும் நுகர்கிறது. இதனை உணர்ந்து பிறர் இந்நிலைமை எய்துதற்கு அரியர் என்று இந்திரனை வியந்து இந்திரன் நிலை கண்டு மகிழாதும், பிறர் இந்நிலை எய்துதற்கு எளியர் என்று குரங்கினை இகழாதேயும் நல்வினை தீவினைத் தன்மை இத்தன்மைதது என்று தெளிந்தவர்களே நாற்பத்திரண்டு பரமாகமங்களையும் தெரிந்தவர்கள்

"பெரிய இன்பத்து இந்திரனும் பெட்ட செய்கைச் சிறு குரங்கும்
உரிய செய்கை வினைப்பயத்தை உண்ணும் எனவே உணர்ந்தவனை
அரியர் என்ன மகிழாதும் எளியர் என்ன இகழாதும்
இரு சார் வினையும் தெளிந்தாரே இறைவன் நூலும் தெளிந்தாரே"
– 2815

மிக்கோரை விரும்புதல், வெறுப்பின்மை, வீடு எய்தும் கருத்து தம்மிடத்தே நிற்றல், அறிவர்க்குச் செய்யும் பூசைக்கு எதிர்விரும்புதல், அழிந்தோரைப் பழைய நிலையில் நிறுத்துதல், அறத்தைக் கூறுதல் அறிவு இல்லாதவர்களைக் கூடா திருத்தல், சினத்தைப் போக்குதல், செருக்கைக் கெடுத்தல் நல்லவரிடம் இனிமையாகப்பழகுதல் ஆகிய இவைகளே பரமாகமப் பொருளின் தெளிவாகும்.

"உறுவர்ப் பேணல், உவர்ப்பின்மை, உலையா இன்பம் தலைநிற்றல்
அறிவர் சிறப்பிற்கு எதிர் விரும்பல் அழிந்தோர் நிறுத்தல் அறம்பகர்தல்
சிறியார் இனத்துச் சேர்வின்மை சினம்கைவிடுதல் செருக்கு அவித்தல்
இறைவன் அறத்துளார்க்கெல்லாம் இனியர் ஆதல் இது தெளிவே"
– 2816.

சரீர பந்துக்கள் நம் உண்மைச் சுற்றம் ஆகார். அவர்கள் உறவு இந்த உடலால் ஏற்பட்டதே., இந்த உடல்கழியின் அவர்கள் உறவு அறுந்துவிடும். நமக்கு உண்மை உறவு நாம் செய்யும் வினைகளே. இதனைப் பெரிய ஞானியாகித் தன் வாழ்க்கையின் இறுதியாக அமைந்த சில மாற்றங்களில் பக்குவமுற்று வாழ்ந்த சச்சந்தன் தான் கட்டியங்காரனொடு போரிடச் செல்லும் முன் தன் தேவி விசயைக்குக் கூறி அவளை மயில்பொறியில் ஏற்றி அனுப்பினான். பின்பு விசயமாதேவி பதினாறு ஆண்டுகள் தவம் செய்து இந்த உண்மையை உணர்ந்து அரியணை ஏறிய தன் மகனுக்கு உணர்த்தினார். சச்சந்தன் விஜயமாதேவியிடம் நம்முடைய பழைய மானிடப் பிறப்பைக் கணக்கிடின் கடலிலுள்ள வெண் மணலும் உறையிடப் போதாத எல்லை உடையன, அப்பிறவியுள் எல்லாம் பிறந்தும் நாம் வேறுபட்டோம். இனி இவ்வுடம்பை நீங்கிச் செல்லும் கதியிலும் சேறோம். ஆதலின் இப்பொழுது சேர்ந்து நின்ற இரண்டு நாளை உறவை உறவாகக் கருதி அதற்கு இரங்கல் வேண்டா என்று உபதேசித்தான்.

"தொல்லைநம் பிறவி எண்ணின் தொடுகடல் மணலும் ஆற்றா
எல்லையே அவற்றுள் எல்லாம் ஏதிலம் பிறந்து நீங்கிச்
செல்லும் அக் கதிகள் தம்முள் சேரலம் சேர்ந்து நின்ற
இல்லினுள் இரண்டு நாளைச் சுற்றமே இரங்கல் வேண்டா"
– 270.

காற்றடிக்கப்பட்ட மேகக்கூட்டம் சிதறுமாபோலச் சிதறிவிடுதற்குக் காரணமான தீவினையால் சிதறி அடிக்கப்பட்டுச் சுற்றமெல்லாம் வெவ்வேறாய்ப் போவதல்லது உடன் உறையும் பழக்கம் அதற்கு இல்லை. ஆதலால் எம்மிடத்துக் கொண்டுள்ள பற்றினை நீயும் ஒழிவாயா என்று தன்னுடைய தாய் தன்னுடனேயே அரண்மனையில் இருத்தலை விரும்பிய சீவகனிடம் விசையை கூறினாள்.

"கடுவளி புடைக்கப்பட்ட கணமழைக் குழாத்தின் நாமும்
விடுவினை புடைக்கப் பாறி வீற்று வீற்று ஆயின் அல்லால்
உடன் உறை பழக்கம் இல்லை ஒழிமதி அத்தை காதல்
வடுவுடைத்து என்று பின்னும் மாபெருந்தேவி சொன்னாள்"
– 2618.

கட்டியங்காரன் வீரர் சூழச் சீவகன் கச்சிட்டுப் பிணித்தாற் போலத் தன்மனத்தைப் பிணித்து அவர்களிடையே வாளா சென்றதைக் கண்டு வருந்திய சுற்றத்தாரிடம்

"கட்டுயில் அனந்தர் போலக் கதிகளுள் தோன்று மாறும்
விட்டு யிர் போகு மாறும் வீடுபெற்று உயரு மாறும்
உட்பட உணர்ந்த யானே உள் குழைந்து உருகல் செய்வேன்
எட்பகவு அனைத்தும் ஆர்வம் ஏதமே இரங்கல் வேண்டா"
– 1097.

கண்உறக்கமும் விழித்தெழுதலும் போல உயிர் போம் படியும் பிறக்கும் படியும் வீடுபெறும் படியும் நெஞ்சிலே அழுத்தமாகப் பொருந்தும் படி உணர்ந்த யான் இன்றைய துன்பம் கருதி மனதில் உருகேன். எள்ளின் ஒரு பாதி அளவும் பொருள்கள் மேலே வேட்கை நிகழ்தல் ஒருவர்க்குத் துயரமே செய்யும் ஆதலின் நீங்கள் என்னிடம் கொண்டுள்ள ஆர்வத்தால் இரங்கல் வேண்டா என்று கூறிய உபதேசத்திலும் தேசபந்துக்கள் நமக்கு உண்மை உறவினர் அல்லர் என்ற மெய்ப்பொருள் புலப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே தேகபந்துக்களையே உண்மை உறவினர் என்ற தவறான எண்ணத்தால் அவர்கள் முன்னேற்றத்திலேயே அன்பு செலுத்துவதனை விடுத்து எல்லா உயிர்களுக்கும் நலன் தேடுவதாகிய அன்பின் நீட்சியாகிய அருள் உள்ளத்தால் ஏனைய உயிர்களுக்கும் நலன் நாடிச் செயற்படுதல் ஓர் அறவெற்றியாக விளக்கப்பட்டது.

## *உ. காமம் நீத்த பால்*

பற்றறுத்துப் பயன்கருதாது கடமைகளைத் தாழ்ப்பின்றி செய்தல்.

விசயை கண்ட தீக்கனா செயற்படத் தொடங்கியதை உணர்த்திய சச்சந்தன் சில காலமாகப் பரமாகமங்களை அவளுக்குப் பயிற்றுவித்து அவள் பக்குவமுறச் செய்தவன் ஆதலின், தான் கட்டியங்காரனை எதிர்த்துப் போரிடப் போகும் முன் போரின் முடிவினை உணர்ந்தவனாதலின் அவளைச் சேமமாக மயிற்பொறியில் சேர்த்திப் பகைவனிடமிருந்து தப்பிஉயிர் வாழச் செய்யும் முன் அவளுக்கு உணர்த்திய நன்மொழிகளில்

சாதல் தானும் ஆதல் பிறத்தல் தானும் அழிதல் தானும் எல்லாம் தம் வினைப்பயத்தால் உண்டாவனவாம். ஆண்டுச் சாதலுக்கு வருந்துதலும், பிறத்தலுக்கும் ஆதலுக்கும் இன்புறுதலும் எல்லாம் அறிவின்மையாகும். இங்ஙனமாதலின் நீ வருந்துதல் அறிவின்மையாகும். நல்வினை தீவினைகள் தம் பயனைத் தருதல் இயல்பேயாகும் என்று விசயமாதேவியிடம் தான் முன்பு கொண்டிருந்த பற்றினை நீக்கித் தன் கடமை உணர்ச்சி தோன்ற அவளை மயில் பொறியில் ஏற்றி உயிர் தப்பச் செயற்பாடும் முன் கூறிய உபதேசம் அவன் பற்றறுத்துத் தன் கடமையைச் செய்சவதன்கண் ஈடுபட காமம் நீத்த பாலைக் குறிப்பதாகும்.

> "சாதலும் பிறத்தல் தானும் தம்வினைப் பயத்தி னாகும்
> ஆதலும் அழிவும் எல்லாம் அவைபொருட்டு இயல்பு
> கண்டாய்
> நோதலும் பரிவும் எல்லாம் நுண்ணுணர்வு இன்மை அன்றே
> பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி என்றாள்"
> – 269.

தன் உயிரை இவ்வுலகில் நெடு நாள் மகிழ்ச்சியாக வாழக் காக்குமாறு போலப் பல உயிர்களையும் பாதுகாத்து தானும் இவ்வுலகில்

வாழ்வானாயின் தன் உயிருக்குப் பாதுகாவல் தேடிக் கொள்பவனாம் இன்பத்துக்கு இருப்பிடமானவனாய் மேம்பட்ட பொன் உயிராகத் தேவர் உலகில் தங்கிப்பின்னர் பீடுபெறும் அங்ஙனம் செய்யாது பிற உயிர்களுக்கு நோய் செய்யின் அவ்வுயிர் நரகத்தே விழும்.

"தன் உயிர் தான் பரிந்து ஓம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க்கு இறைவனாம் இன்ப மூர்த்தியாய்ப்
பொன்னு யிராய் பிறந்து உயர்ந்து போகுமே" – 3107.

சீவகன் ஆசாரியனுக்குக் கொடுத்த வாக்குறுதியையும் தந்தை யினுடைய விருப்பக் கட்டளையையும் காத்தல் வேண்டிப் பாம்பை வாய் கட்டினான்போலத்தன் கைகளைச் செயற்படாமல் காத்துக் கட்டடியங்காரன் வீரர்கள்சூழ்ந்து வரச் சென்ற அவல நிலையிலும் தன்னை விஞ்சையன் காத்துத் தன்னை அழைத்துச் சென்ற இன்ப நிலையிலும் வருத்தமோ மகிழ்ச்சியோ கொள்ளாமல் யாவும் ஊழ்வினையின் செயல்களே என்று சாந்த நிலையிலேயே இருந்தான்.

"விலங்கிவில் உமிழும் பூணான் விழுச்சிறைப்பட்ட போழ்தும்
அலங்கலந் தாரினான் வந்து அருஞ்சிறை விடுத்த போழ்தும்
புலம்பலும் மகிழ்வும் நெஞ்சில் பொலிதலும் இன்றிப் பொன்
ஆர்ந்து
உலங்கலந்து உயர்ந் துதோளான் ஊழ்வினை என்று விட்டான்"–1167.

சான்றோர்கள் தம் உடலை மயிர்க்கூறுதோறும் வாய்ச்சியால் செதுக்கிப் புண்படுத்தினாலும் தம் உடம்பில் பூசுதற்குச் சந்தனத்தை ஏந்திக் கொண்டு திருவடிகளில் வணங்கினாலும் அத்துன்பத்தையும் இன்பத்தையும் ஊழ்வினைவின் பயன் என்று முடிவு செய்து பிறர் இகழ்தலையோ புகழ்தலையோ பற்றி மனத்தில் வேறுபாடுகொள்ளாமல் யாரையும் தமர் என்றோ பிறர் என்றோ பாகுபாடு செய்யாமல் தமக்கு வகுத்த கடமைகளைச் செய்வதன் கண்ணே ஈடுபட்டிருப்பர்.

"வாய்ச்சிவாய் உறுத்தி மாந்தர் மயிர்தொறும் செத்தி னாலும்
பூச்சுறு சாந்தம் ஏந்தி புகழ்ந்து அடி பணிந்த போழ்தும்
தூக்கி இவ்விரண்டும் நோக்கித் தொல்வினை என்று தேறி
நாச்செறு பராவு கொள்ளார் நமர் பிறர் என்றும் உள்ளார்"
– 2825.

புகழ்ந்துரை மகிழ்ச்சியும் பொறபில் பன்சலம் இகழ்ந்துரைக்கும் இரக்கமும் இன்றி என்றும் ஒரே மனநிலையில் இருந்து கொண்டு கடமையைச் செய்தலே **காமம் நீத்தபால்** ஆகும்.

விசயமாதேவி சீவகன் அரியணை ஏறிய பின் தன் எஞ்சிய வாழ்நாளைக் காமம் நீத்தபாலொடு கழித்ததன்மை.

"முழுதுலகு எழிலேத்தும் மூரிவேல் தானை மன்னன்
தொழுதகு பெருமாட்டி தூமணிப் பாவை அன்னாள்
பொழிதரு மழை மொக்குள் போகம் விட்டு ஆசை நீக்கி
வழிவரு தவம் எய்தி வைகினாள் தெய்வ மன்னாள்" – 2651.

*சச்சந்தன் பெருமாட்டி. பாவை அன்னாள்.* தெய்வமன்னாள் அவள் மழை மொக்குள் போலும் போகத்தைத் தீது என்று நீக்கி ஆசையையும் நீக்கி வீட்டைஎய்தும் வழியிலேயே வருகின்ற பரமாகமத்தில் *கூறிய தவத்தை எய்தித் தங்கினாள்.*

நல்வினையாகிய குழவி அருள் என்னும் செவிலி தழுவிப்பாராட்ட அவள் மூலையை உண்டு வளர்ந்து இந்திரனாய்ச் செல்லாநிற்கும். தீவினை என்னும் குழவி கொடுமை என்னும் செவிலிகையிலே இருந்து காமமாகிய முலை உண்டு வளர்ந்து பலவித துன்பங்களுக்கு இருப்பிடமான விலங்குகதி நாகர் கதியிலே சேர்க்கும்.

"நல்வினக்குழவி. நன்னீர்த் தயா எனும் செவிலி நாளும்
புல்லிக் கொண்டு எடுப்பப் பொம் மென் மணிமுலை கவர்ந்து வீங்கிச்
செல்லுமாற் தேவர் கோவாய்"

"தீவினைக் குழவி செற்றம் எனும் பெயர்ச் செவிலி கையுள்
வீவினை இன்றிக் காமமுலையுண்டு வளர்ந்து வீங்கித்
தாவினை இன்றி வெந்நோய்க் கதிகளுள் தவழும்"

கட்டியங்காரனொடு சச்சந்தன் தனியனாய்ப் பொருது வலியற்ற அளவில் இனிப் போரிட இயலாது என்ற நிலையில் சுக்கிலத் தியானத்தில் ஈடுபட்டு. தீதும் நன்றும் பிறர்தரவாரா ஆதலின் தன் அழிவுக்குக் கட்டியங்காரனைத்தன் தீவினை கருவியாகக் கொண்டு செயற்பட்டது என்று அவனிடம் மனத்துக் கொண்ட பகைமையைப் போக்கி உள்ளம் தூயனாய், வாமனுடைய திருவடித் தியானத்தாலே உடல் தூயனாய்,

பஞ்சமந்திரங்களை உச்சரித்தலிலே வாக்குத் தூயனாய் உள்ளம் செயல் இம்மூன்றும் தூயனாய்க் காமம் நீத்த பாலினனாய் கடமையைச் செய்து முடித்த நிறைவோடு வீடு பேறு எய்தினான்.

"பாலருவித் திங்கள் தோய் முத்தமாலைப்
பழிப்பில் நெடுங்குடைக்கீழ் பாய்பரி மான்தேர்க்
கோலருவி வெஞ்சிலையான் கூர்வாளோடு
*மணிக் கேடகமும் மறமும் மாற்றி*
வாலருவி வாமன் தாமரை
மலர்சூடி மந்திரமென் சாந்து பூசி
வேலருவிக் கண்ணினார் மெய்காப் போம்ப
வேந்தன் போய் விண்ணோர் விருந்து ஆயினானே"
– *291.*

*சச்சந்தன்* வாளினையும் கேடகத்தையும் கட்டியங்காரனிடம் கொண்ட பகைமையையும் துணையாக் கொண்டு பொருது பின் வாளினையும் கேடகத்தையும் நீத்து உடல் தூய்மை கொண்டு. கட்டியங்காரனிடம் கொண்ட பகைமையையும் தன் ஞானத்தால் போக்கி மனத்தூய்மை பெற்று வாமனுடைய நற்குணங்களாகிய அருவியில் நீராடி மந்திரமாகிய சந்தனத்தைப் பூசிக் கொண்டு வாமனுடைய மலரை ஒத்த திருவடிகளே உள்ளதில் நாடி மனம் மொழி மெய் மூன்றும் தூயனாய் உயிர் நீங்கும் போது தியனாம் வந்துஉதவுதலின் வீடுபேறு உற்றான்.

காதி, அகாதி என்ற எண் வகை வினைகளையும் அடியொடு நீக்கிக் காமம் நீத்த பாலினால் எண்குணங்களுக்கு இருப்பிடமான மணி உயிராய் உயர்ந்த சீவகன் நெடியவாட்கண்களையும் முல்லைக் கண்ணியையும் உடைய கேவல ஞானம் என்னும் திருமகள் ஒருபாகமாகத் தான் ஒருபாகமாக அவளைப்புல்லி மூவுலகின் அப்பாலுள்ள சித்தசேத்திரத்தில் நிலையாக இன்பக்கடலில் *அழுந்தினான்.*

"கேவல மடந்தை என்னும் கேழ்கிளர் நெடிய வாட்கண்
பூவலர் முல்லைக் கண்ணிப் பொன் ஒரு பாகமாகக்
காவலன் தான்ஒரு கூறாக் கண் இமை யாது புல்லி
மூவுலகு உச்சி இன்பக் கடலினுள் மூழ்கினானே" – 3117.

ஏனைய மகளிருக்கு உரிய பிரிதல், பிணி, மூப்பு இறப்பு பிறப்பு என்பன இல்லாதாளாய் என்றும் பேரின்ப வடிவிலான கேவல

மடந்தையைக் கூடி தேவர்கள் பொன்மயமான மாடத்திலே தேன்சொரியும் மலர் மாலை சந்தனம் குங்குமம்., இனியபுகை, விளக்கு இவற்றைஏற்றி வழிபாடு செய்ய சித்தசேத்திரத்தில் சீவகன் நிலையாக உள்ளான்.

"பிரிதலும் பிணியும் மூப்பும் சாதலும் பிறப்பும் இல்லா
அரிவையைப் புல்லி அம்பொன் அணிகிளர் மாடத்தின் தேன்
சொரி மது மாலை சாந்தம் குங்குமம் சுண்ணம் தேம்பாய்
விரிபுகை விளக்கு விண்ணோர் ஏந்தமற் றுறையு மன்றே"– 3118.

காமம் நீத்த பாலினராய்த் தம்வாழ் நாளைக் கழிப்பவர்கள் பிறப்புபிணி மூப்பு சாக்காடு அவற்றைத் தவிர்த்து சித்தசேத்திரத்தில் அரூபியாய் நிறதி சய இன்பத்தில் என்றும் இருப்பீர் என்று சீவகசிந்தாமணி மனித வாழ்க்கையில் அடைய வேண்டிய மிக உயரிய இன்பத்தை விளக்கி நிறைவுறுகிறது.

"திங்கள் மும்மாரி பெய்க திருவறம் வளர்க செங்கோல்
நன்கினிது அரசன் ஆள்க நாடெல்லாம் விளைக மற்றும்
எங்குள அறத்தினோரும் இனிது வாழ்க எங்கள்
புங்கவன் பயந்த நன்னூல் புகழோடும் பொலிக மிக்கே"

***தி.வே.கோபாலையர்***

முற்றும்.

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு


முனைவர். திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

டாக்டர் திரு. ந. சேதுராமன்

முனைவர். திரு. சுப. அண்ணாமலை

முனைவர். திரு. ம.ரா.போ.குருசாமி

முனைவர். திரு. அ.அ.மணவாளன்

முனைவர். திரு. அ. தட்சிணாமூர்த்தி

இராசா. திரு. T.N.S. முருகதாஸ் தீர்த்தபதி

முனைவர். திரு. செ. கந்தசாமி

முனைவர். திரு. க. சின்னப்பா



பதிப்பாசிரியர். இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.

ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434-32484

# மதுரைத் தமிழ்ச்சங்க நூற்றாண்டு மலருக்கு

தமிழ், தமிழ்ப் பண்பாடு,
தமிழ்ச் சமுதாயம், தமிழ்ச்சங்கம்
மற்றும்
வள்ளல் பாண்டித்துரைத் தேவர்
குறித்த கட்டுரைகள் அனுப்ப


தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்
செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-5575615

முதல்வர்
செந்தமிழ்க் கல்லூரி,
மதுரை – 625 001.
போன் : (0452)-2343707